ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, வானொலி கேட்டல்.



பெயர் :- நந்தகோபால் பிறிசில்லா
தரம் :- ஆண்டு 05
பாடசாலை :- புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப் புத்தகம் வாசித்தல், விளையாட்டு, அம்மாவுக்கு உதவுதல்.



பெயர் :- செல்வச்சந்திரன் மகாஜன்
தரம் :- 03
பாடசாலை :- புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப் புத்தகம் வாசித்தல், முத்திரை சேகரித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

குட்டிக் கதை

## சேற்றில் விழுந்த நரி

நாட்டுப் புறத்தில் அலைந்து கொண்டிருந்த நரி ஒன்று சேறும் சகதியும் நிறைந்த ஒரு பெரிய குட்டைக்கு வந்து சேர்ந்தது. அந்தக் குட்டையை ஒரே தாவில் தாவி விடக் கூடிய திறமை தனக்கு இருப்பதாக அது நினைத்தது. இருந்தாலும் தனது திறமையைச் சோதிக்க விரும்பி அவ்வாறே தாவும் பொழுது எதிர்பார்த்த அளவில் பாதிப் பங்கு திறமைதான் அதற்கு இருந்தது; ஆகையால் அது அந்தக் குட்டையின் நட்ட நடுவே ஆழத்தில் விழுந்து விட்டது. வெளியேறுவதற்கு எவ்வளவோ முயன்றும் அதனால் முடிய வில்லை. உடனே அது தன்னால் முடிந்த வரை கதறிப் பார்த்தது.

அங்கிருக்கும் மலைகளும் காடுகளும் தன் கதறலைக் கேட்டு அஞ்சி நடுங்கி தனக்கு உதவி செய்ய வரக்கூடும் என்று அந்த நரி நினைத்தது. இந்த எண்ணம் ஈடேறாமல் கிடந்த இடத்திலேயே அது கிடக்க நேர்ந்தது. மலைகளும் காடுகளும் பேசாமல் இருந்து கொண்டு அதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன. இந்தத் தோல்வியினால் தனது கதறலை அந்த நரி சிறிது குறைத்துக் கொண்டு தனக்குத்தானே முதலில் சமாதானம் தேடமுயன்றது: "நான் போடுகிற சப்தத்தை வேண்டுமானாலும் குறைத்துக் கொள்கிறேன்; அதற்குப் பின் நீங்கள் எனக்குச் செய்யப் போவதுதான் என்ன?" என்று கேட்டது. அதற்கும் பதிலே இல்லை. இறுதியில் முயற்சியைக் கை விட்டுவிட்டுத் தனக்குத் தானே "இப்படி நான் சேற்றில் சிக்கிக் கொண்டது எனக்கு ஒரு பெரிய தோல்வி தான்; இருந்தாலும் பாதகமில்லை" என்று அந்த நரி கூறிக் கொண்டது.

இந்த நரியைப் போன்ற ஒருவனை நீ நண்பனாகக் கொள்ளக் கூடாது. ஆனால் அவனுடைய போக்கை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். தோல்வி ஏற்பட, அவனுடைய கூக் குரலும் பெரிதாகும்; ஆனால் விரைவில் கூக்குரலை விட்டு விட்டு, தனக்குத் தானே அவன் புலம்பிக் கொண்டு கிடப்பான்.



## புதல்வர்களின் ...

மூன்று புதல்வர்கள் வீட்டைவிட்டு வெ...
தங்கள் சொந்த முயற்சியில் மேன்மை...
வந்தரானார்கள். அவர்கள் ஒன்றாகவே ...
தங்கள் வயதான தாயாருக்கு தங்களால்...
பரிசுகள் எப்படியாக இருக்க வேண்டு...
விவாதித்தார்கள். எமது தாயாருக்கு நா...



வீட்டைக் கட்டப்போகி றேன் என முத...
னான். அதற்கு இரண்டாமவன் என்...
மெர்செடஸ் பென்ஸ் காரில் சாரதி சகிதம்...
பேன் என்றதைக் கேட்ட மூன்றாமவன்...
வரையும் நான் தோற்கடிக்கப் போகி...
பைபிள் வாசிப்பில் எவ்வளவுதூரம் அ...

குட்டிக் கதை

## முரசு அடித்தவ...

வீதி வழியாக, நிறையச் சாமான்களை...
யொன்று சென்றுகொண்டிருந்தது. வீதி...
படுத்திருந்த பாம்பொன்று அதைப் பார்த்...
விபரீத ஆசை ஏற்பட்டது. அந்த வண்டி...
வேண்டு மென்று தீர்மா னித்தது. தனது இ...



செயலை...
அறிவிக்...
என்பது அ...
இருந்தது...
ஆற்றி...
மிட்டுக் ...
ளையின் ...
காதுகளில்...
அதை அ...
பனே! ...
செயலை...
போகிறே...
ருக்கும் ...
டும். அ...
பொருத்...

தேனீக்கள் கழகம்



ிண்ணப்பம்

:....................................

லை :....................................

:....................................

:....................................

:....................................

றைகள் :..............................

:..............................

............ ..............................

ஒப்பம்

............ ..............................

ர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## ங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | :- | குலசிங்கம் சர்வாணி |
| ரம் | :- | ஆண்டு 02 |
| டசாலை | :- | கற்கோவளம் அ.மி.த.க பாடசாலை |
| ர்வமுள்ள றைகள் | :- | விளையாட்டு, வானொலி கேட்டல். |

| | | |
|---|---|---|
| பெயர் | :- | செல்வச்சந்திரன் மகாஜன் |
| ரம் | :- | 03 |
| டசாலை | :- | புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை |
| ர்வமுள்ள றைகள் | :- | கதைப் புத்தகம் வாசித்தல், முத்திரை சேகரித்தல், தொலைக்காட்சி பார்த்தல். |

து. இந்த எண்ணம் ஈடேறாமல் கிடந்த அது கிடக்க நேர்ந்தது. மலைகளும் காடுகளும் ந்து கொண்டு அதைப் பார்த்து ஏளனமாகச் த் தோல்வியினால் தனது கதறலை அந்த நரி துக் கொண்டு தனக்குத்தானே முதலில் நடமுயன்றது: "நான் போடுகிற சப்தத்தை யும் குறைத்துக் கொள்கிறேன்; அதற்குப் பின் செய்யப் போவதுதான் என்ன?" என்று கும் பதிலே இல்லை. இறுதியில் முயற்சியைக் டுத் தனக்குத் தானே "இப்படி நான் சேற்றில் து எனக்கு ஒரு பெரிய தோல்வி தான்; இருந் ல்லை" என்று அந்த நரி கூறிக் கொண்டது. ப் போன்ற ஒருவனை நீ நண்பனாகக் கொள் னால் அவனுடைய போக்கை சிறிது சிந்தித்துப் ம். தோல்வி ஏற்பட, அவனுடைய கூக் குரலும் னால் விரைவில் கூக்குரலை விட்டு விட்டு, அவன் புலம்பிக் கொண்டு கிடப்பான்.



# புதல்வர்களின் அன்பளிப்பு

மூன்று புதல்வர்கள் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று, தங்கள் சொந்த முயற்சியில் மேன்மைய டைந்து செல்வந்தரானார்கள். அவர்கள் ஒன்றாகவே திரும்பிவந்ததும், தங்கள் வயதான தாயாருக்கு தங்களால் வழங்கக்கூடிய பரிசுகள் எப்படியாக இருக்க வேண்டுமென்பது குறித்து விவாதித்தார்கள். எமது தாயாருக்கு நான் ஒரு பெரிய



வீட்டைக் கட்டப்போகி றேன் என முதலாமவன் கூறினான். அதற்கு இரண்டாமவன் என் தாயாரை ஒரு மெர்செடஸ் பென்ஸ் காரில் சாரதி சகிதம் அனுப்பி வைப்பேன் என்றதைக் கேட்ட மூன்றாமவன், உங்கள் இருவரையும் நான் தோற்கடிக்கப் போகிறேன் என்றான். பைபிள் வாசிப்பில் எவ்வளவுதூரம் அம்மா ஆர்வமாயிருக்கிறாரென்பதை நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள். அவரால் தொடர்ந்து பார்ப்பதற்கும், கண் பார்வை நல்ல முறையில் இல்லை என்பதும் உங்களுக்குத் தெரியும்.

நான் தனித்துவம் வாய்ந்த கிளியொன்றை அவருக்கு அனுப்புகிறேன். அது பைபிள் முழுவதையும் ஒப்புவித்துவிடும். தேவாலயத்தில் உள்ள பெரியவர்களுக்கு அதைப் போதிப்பதற்கு 12 வருடங்கள் எடுத்திருக்கிறது. அது தனித்துவமான ஒன்றாக இருக்கிறது. தாயார் செய்யவேண்டியதெல்லாம், அத்தியாயம் மற்றும் வாக்கியப் பகுதியை கிளிக்குச் சொல்ல வேண்டியது மட்டும். கிளி அவற்றை ஒப்புவித்துவிடும்.

அதன்பிறகு விரைவிலேயே, தாயாரால் நன்றி கூறும் கடிதங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டன.

மில்டன் என்ற முதலாவது மகனுக்கு எழுதும்போது – நீ கட்டிய வீடு மிகப் பெரியது. நான் இருப்பதோ ஒரு அறையில். ஆனால் அந்த வீடு முழுவதையுமே நான் சுத்தம் செய்யவேண்டியிருக்கிறது.

அடுத்தவனான கெரால்டுக்கு எழுதுகையில் – நான் மிக வயதானவளாகவும், பயணம் செய்வதற்கு இயலாதவளாகவும், கண்பார்வையைச் சரிவரப் பயன்படுத்த முடியாதவளாகவும் இருக்கிறேன். நீண்ட நேரம் வீட்டிலேயே தங்கியிருக்க நேரிடுவதால் மெர்செடஸ் காரைப் பயன்படுத்துவதென்பது மிக அபூர்வமானதாக இருக்கிறது. அந்தச் சாரதியும் அநாகரிகனாக இருக்கிறான்.

"பிரியமுள்ள டொனால்ட்! உன் தாயார் எதை விரும்புகிறாரென்பதை அறியும் ஆற்றலும், அறிவும் பெற்றவனாக இருக்கிறாய். இளைய நெஞ்சிலிருந்து வந்தவை மிக மகிழ்வூட்டக்கூடியதாயிருந்தது" என மூன்றாமவனுக்கு எழுதினாள்.

(குட்டிக் கதை)

# முரசு அடித்தவரின் முடிவு

வீதி வழியாக, நிறையச் சாமான்களை ஏற்றிய வண்டியொன்று சென்றுகொண்டிருந்தது. வீதியின் ஓரமாகப் படுத்திருந்த பாம்பொன்று அதைப் பார்த்தது. அதற்கு ஒரு விபரீத ஆசை ஏற்பட்டது. அந்த வண்டியை நிறுத்திவிட வேண்டு மென்று தீர்மா னித்தது. தனது இந்தப் பராக்கிரம



செயலை எல் லோருக்கும் அறிவிக்க வேண்டும் என்பது அதன் ஆசையாக இருந்தது.


ஆற்றின் கரையிலே சத்தமிட்டுக் கொண்டிருந்த தவளையின் பேரிரைச்சல் அதன் காதுகளில் விழுந்தது. உடனே அதை அணுகி, "அன்பு நண்பனே! நான் ஒரு சாகசச் செயலைச் செய்துகாட்டப் போகிறேன். அதை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும். அதற்கு நீதான் பொருத்தமானவன்" என்று சொல்லிற்று.

தவளைக்கு ஒரே மகிழ்ச்சியாகப் போய் விட்டது. துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடியது. இயன்றளவு தனது குரலை உயர்த்திக் கத்தியது. கத்திக் கொண்டே இருந்தது. பாம்புக்கு இந்தச் செயல் உற்சாகத்தைக் கொடுத்தது. வீதியின் குறுக்கே சென்றது. வண்டியை எதிர்பார்த்துக் குறுக்காகத் தனது உடலை நீட்டிப் படுத்தது.


தவளையும் தனது முரசு கொட்டும் வேலையை முறைப்படி செய்துகொண்டே இருந்தது. வண்டியும் நெருங்கிக் கொண்டிருந்தது. வண்டியைத் தடுத்துவிடுவேன் என்று பாம்பு பெருமைப் பட்டுக்கொண்டு கிடந்தது. என்னே பரிதாபம்! வண்டி நகர்ந்து சென்றது. பாம்பு துண்டுகளாகிக் கிடந்தது. ஆயினும் தவளையின் முரசொலி தொடர்ந்து கொண்டே இருந்தது.

வானில் வட்டமிட்ட பறவைகள் கீழிறங்கின. பாம்பின் துண்டுகளைக் கௌவிக்கொண்டு மேலெழுந்தன. அப்போதும் தவளையின் இரைச்சல் குறைந்தபாடாக இல்லை. நீர்க்கரையில் இறங்கிய பறவைகள் தாளம் போட்ட தவளையையும் பிடித்துத் தின்று தீர்த்தன.


தமது பலமறிந்து செயற்படாதவர்கள், நேர்மைக்கு மாறாக நடந்து கொள்பவர்களின் கொடுங்கோல் ஆட்சி ஒழிக்கப்படும் போது, அதற்கு ஒத்து ஊதுபவர்களும் ஒழிக்கப் பட்டே தீருவார்கள் என்ற உண்மையை உணர்த்தின அந்தப் பறவைகளின் செயல்.



# சூரிய கிரகணம்



சூரிய கிரகணம் என்றால் என்ன? சூரியனிலிருந்து வரும் வெளிச்சத்தை சந்திரன் மறைப்பதால் தான் இவ்வாறு ஏற்படுகிறது. பூமி இருளடைவது மட்டுமன்றி இரவானதும் வானத்தில் நட்சத்திரங்கள் தோற்றமளிக்கும். சூரிய கிரகணத்தின் போது நீங்கள் வழமையாகக் காண முடியாத அம்சங்களை சூரியனின் வெளிப்புறப் பகுதிகளில் கண்டு கொள்ளலாம். பூரண கிரகணத்தின் போது சூரியன், சந்திரன், பூமி போன்றவை எவ்வாறு நேர்கோட்டில் வருகின்றன என்பதைப் பாருங்கள்.




UMBRA - சந்திரனின் நிழற் பகுதியான இதிலிருந்து பூரணமான கிரகணதைக் காணலாம்.

PENUMBRA - சந்திரனின் நிழற்பகுதியான இதிலிருந்து பகுதியான கிரகணத்தைப் பார்கலாம்.

**எவ்வாறு அவை நிகழ்கின்றன?**

சூரியனானது, பூமியிலிருந்து சந்திரனைப் போன்றதொரு அளவில் தென்படும். ஆகவே சந்திரனானது பூமிக்கும் சூரியனுக்குமிடையிலுள்ள நேர்க்கோட்டில் வரும்போது தான் சூரியனின் ஒளியை மறைத்துக் கொள்கிறது. 31 விநாடி தொடக்கம் 7 நிமிடங்கள் வரை கிரகணம் நிகழ்கிறது.

**அவற்றைப் பார்ப்பதற்கு இவை சரியான முறையா?**

சூரிய கிரகணத்தை நேரடியாக வெறும் கண்களால் பார்ப்பது தவறானதாகும். அது உங்கள் கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். நீங்கள் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளைப் பயன்படுத்தினால் பாதுகாப்பாக இருக்கும்.

புராதன கால மக்கள் சூரிய கிரகணமென்றால் பயந்து நடுங்கினார்களாம். அதைப் பற்றி அறியும் தன்மை அக்காலத்தில் இல்லாதிருந்ததே காரணம். ஆனால் இப்போது நாமெல்லாம் அதைப்பற்றிய தெளிவான அறிவைப் பெற்றவர்களாயிருக்கிறோம்.

கிரகணங்களின் மாதிரி வடிவங்கள் உள்ளனவா? சந்திரனால் சூரியன் பூரணமானக மறைக்கப்பட்ட நிலையைத் தான் சூரிய கிரகணம் என்கிறார்கள். சூரியனின் ஒரு பகுதியைச் சந்திரன் மறைத்துக் கொண்டிருப்பதைப் பகுதியான கிரகணம் என்கின்றனர்.

பகுதி வடிவிலான கிரகணங்கள் மிகப் பொதுவான செயற்பாடுகள் கொண்டதாக இருக்கின்றன.



வருடத்தில் இரண்டு அல்லது ஐந்து தடவைகளுக்கிடையில் கிரகணங்கள் பூமியில் ஏற்படுகின்றன.

இறுதியான பூரண கிரகணம் 1999இல் பிரிட்டனில் காணப்பட்டது.


| கண்டுபிடிப்புகள் | | கண்டுபிடித்தவர்கள் |
|---|---|---|
| புவியீர்ப்பு விசை, இயக்க விதிகள் | - | ஐசாக் நியூட்டன் |
| சார்பியல் தத்துவம், ஒளிமின் விளைவு | - | ஐன்ஸ்டீன் |
| தொலைநோக்கி, வியாழனின் துணைக்கோள்கள | - | கலிலியோ கலிலி. |
| சூரிய குடும்பம், சூரியமையக் கோட்பாடு | - | கொப்பணிக்கஸ் |
| கோள் இயக்க விதிகள் | - | ஜோகன் கெப்ளர் |
| அணு உட்கரு (Atomic Nucleus) | - | ரூதர் போர்டு |
| அணு கருக்கொள்கை (Atomic theory) | - | ஜான் டால்டன் |
| எலக்ட்ரான் (Electron) | - | கெப்ளர், ஜெ.ஜெ.தாம்ஸன் |
| புரோட்டான் (Proton) | - | கோல்ஸ்டீன் |
| நியூட்ரான் (Neutron) | - | சாட்விக் |
| மிதத்தல் விதிகள் | - | ஆர்க்கிமிடிஸ் |
| மின்காந்த விளைவு | - | ஊயர்ஸ்டெட் |
| எக்ஸ்ரே | - | வில்ஹெம் |
| மின்காந்தத் தூண்டல் | - | மைக்கேல் பாரடே. |
| இடிதாங்கி | - | பெஞ்சமின் ஃப்ராங்கிளின். |
| அணுவைப் பிளத்தல் | - | ஆட்டோஹான், ஸ்ட்ராஸ்மேன் |
| குவி, குழி கண்ணாடி (Bifocul Lens) | - | லியனார்டோ டாதவின்ஸி. |
| செயற்கை கதிரியக்கம் (Artificial Radio Activity) | - | ஹென்றி பெக்கொரல். |
| மின்காந்த அலைகள் (Electromagnetic Waves) | - | ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல். |
| குவாண்டம் கொள்கை | - | மாக்ஸ் ப்ளாங்க். |





## வர்ணம் தீட்டி மகிழுங்கள்



## வரைந்து பாருங்கள்



## எந்தக் கட்டத்தில் அதிக வட்டங்கள் உள்ளன?




## இங்குள்ள ஐவரில் வித்தியாசமானவரைக் கண்டுபிடியுங்கள்



## வழிகாட்டுங்கள்



19.11.2005 - சனிக்கிழமை - பக்கம் 08
ஈழநாடு சிறுவர் அரங்கம்

# பேசும் மரம்

விக்கியும் மூர்த்தியும் நண்பர்கள். விக்கி பணிவான, இரக்கசிந்தையுள்ளவனாக தனது செல்வத்தை மக்க ளின் நலன்களுக்காகச் செலவுசெய்பவன். மூர்த்தியோ செலவு செய்யாத சுயநலமுள்ளவன். அவன் விக்கியு டன் அடிக்கடி காணப்படுவதால் மக்கள் அவனையும் தயாள சிந்தனையாளனாகக் கருதினர். புனித யாத்தி ரையொன்றுக்குச் செல்ல விக்கி விரும்பியதால் அவன் வேண்டுகோளுக்கமைய மூர்த்தியும் கூடச் சென்றான்.







இரண்டு நாட்கள் தொடர்ந்து நடந்தனர். அப்போது அவர்கள் ஒரு கானகத்தைக் கடந்து செல்ல வேண்டிய தாயிற்று. ஒரு கறையான் புற்றுக்கருகில் சென்ற போது, கறையான் புற்றுக்கு அடிப்பாகத்தில் ஏதோ மினு மினுத்துக்கொண்டிருந்ததை விக்கி கண்டான். அதைத் தோண்டிப் பார்த்ததும் தங்க நாணயங்கள டங்கிய மட்பாத்திரம் வெளியே வந்தது. அவர்கள் அதை எண்ணிப் பார்த்ததில் ஆயிரம் பொற்காசுகள் இருந்ததைக் கண்டனர். அதை இருவரும் சமபங்கா கப் பங்கிட்டுக் கொள்ளச் சம்மதித்தனர்.



எல்லாக் காசுகளையும் கொண்டு செல்வது பாதுகாப் பற்றது என்பதால் நாங்கள் ஆளாளுக்கு நூறு காசுகள் வீதம் எடுத்துக் கொண்டு மட்பாத்திரத்தை எங்காவது மறைத்துவைத்து விடுவோம். பின்னர் தேவையேற்ப டும் சமயங்களில் வந்து எடுத்துக்கொள்ளலாம் என மூர்த்தி கூறியதை விக்கி ஆமோதித்தான். அவர்கள் அதை ஒரு ஆலமரத்தினடியில் தோண்டி மறைத்து விட்டார்கள். புனித யாத்திரையை முடித்துக்கொண்ட பின் தங்கள் கிராமத்துக்குச் சென்றார்கள்.




ஒரு மாதத்தின் பின், விக்கி மற்றொரு யாத்திரைக் குத் தயாரானான். இந்தத் தடவை மூர்த்தி அவனுடன் கூடப்போக மறுத்துவிட்டான். விக்கி சென்றவுடன், மூர்த்தி காட்டுக்குச்சென்று, மட்பாத்திரத்தைத் தோண்டி யெடுத்து மீதமிருந்த எண்ணூறு பொற்காசுகளையும் எடுத்துச்சென்றான். தன் பயணத்திலிருந்து திரும்பிய விக்கி - கொஞ்சம் பொற்காசுகளை எடுத்து வருவதற் குத் துணையாக மூர்த்தியை வருமாறு அழைத்ததால், இருவரும் காட்டுக்குச் சென்றார்கள்.



மட்பாத்திரத்தைத் தோண்டியயெடுத்த விக்கி அது வெறுமையாக இருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தான். அதற்கு மூர்த்தியோ யாத்திரைக்குச் செல்லும் சாக்குப் போக்கில் காட்டுக்குச் சென்று விக்கியே காசுகளை அபகரித்துவிட்டதாகக் குற்றம் சுமத்தினான். அதை விக்கி மறுத்தான். ஆகவே ஒரு நீதியாளரிடம் சென்றனர். மூர்த்தி சொல்வதை முதலில் செவிமடுத்தார் நீதியாளர். "அந்தப் புதையல் பற்றிய விடயம் மூன்றாம் ஆள் எவருக்கும் தெரிந்திருக்க முடியாது. ஆலமரத்து ஆவியைக் கேட்டால் அது எமக்கு உள்ளதைக் கூறிவி டும் என்றான் மூர்த்தி.

நீதியாளர் அவர்களை ஆலமரத்தடிக்கு அழைத்துச் சென்றார். மூர்த்தி அந்த மரத்திலிருந்த பெரிய பொந் துக்குள் தலையை நீட்டி "ஓ ஆலமரத்து ஆவியே, புதையலைத் தோண்டியெடுத்துத் திருடியது விக்கியா அல்லது மூர்த்தியா என்று கூறமாட்டாயா?" எனக் கத் தினான். பொந்திலிருந்து வெளிப்பட்ட குரல் "விக்கி தான்" என்றது. நீதியாளர் தனது ஆட்களிடம் விக்கி யைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டார்.





கைகளைக் கட்டிக்கொண்டுநின்ற விக்கி, மதிப்புக் குரிய நீதியாளர் அவர்களே! நான் அந்தக் காசுகளைத் திருடியதாகக் கூறியதை இப்போது எவ்வாறு மறுக்க முடியும்? அதே பொந்துக்குள்தான் நான் அவைகளை மறைத்துவைத்தேன். ஆனால் அதற்குள் பெரிய நாகமொன்று இருக்கிறது. அதை வெளியேற்றாவிடில் அதை என்னால் இழுத்தெடுக்கமுடியாது என்றான். நீதியாளர் தன் ஆட்களை அழைத்து காய்ந்த இலைச் சருகுகளையெல்லாம் கொண்டுவந்து பொந்துக்குள் திணித்துத் தீமூட்டுமாறு கூறினார்.

தீ பற்றி எரியத் தொடங்கியவுடன், ஒரு மனித ஓலத் தைக் கேட்டனர். அதையடுத்து வயோதிப மனிதர் பொந்துக்குள் இருந்து வெளியே பாய்வதையும் கண் டனர்.

நீதானா இந்த அரச மரத்தடி ஆவி? என நீதியாளர் கேட்டதற்கு இல்லை ஐயா, நான் மூர்த்தியின் தந்தை யார். அவன்தான் பொற்காசுகளைத் திருடியவன் என் றார். மூர்த்தி கைது செய்யப்பட்டான். "உன் நண்பர்க ளைத் தேர்ந்தெடுப்பதில் நீ மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும்" என்று நீதியாளர் விக்கிக்கு அறி வுரை வழங்கினார்.



நமது ஈழநாடு

**வைர வரிகள்**

சரியான பதில்களைக் கொடுப்பதைவிடச் சரியான கேள்விகளைக் கேட்கத்தான் அதிகத் திறமை வேண்டும்.

- ராபர்ட் ஹாஃப் -

## நமது நோக்கு

# மகிந்த ராஜபக்ஷ முன் உள்ள நெருக்கடிகளும் சவால்களும்!

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

ரணிலா? மகிந்தவா? என்ற கேள்விக்கான விடையை வட - கிழக்கு வாழ் தமிழ்மக்களைத் தவிர்த்து ஏனைய மக்கள் தமது வாக்களிப்பின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மகிந்தவின் தலைமையிலான ஜே.வி.பி.ஹெல உறுமய உட்பட தீவிரமான பௌத்த சிங்கள அடிப்படைவாதக் குழுக்கள் பலவற்றையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்தத் தேர்தல் வெற்றியானது சில குறிப்பிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டு வதாக அமைந்துள்ளது.

அதாவது, தேர்தலில் வெற்றிபெற்றுள்ள மகிந்த ராஜபகஷ அவர்கள் தற்போது நடைமுறையிலுள்ள போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை ஆரம்பம்முதலே கடுமையாக எதிர்த்து வந்த அனைத்து பௌத்த சிங்கள அடிப்படைவா தக் கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் தலைமை தாங்கிய ஒரு வராகவே தன்னை வெளிப்படையாக அடையாளப்படுத்திக் கொண்டே தேர்தலில் போட்டியிட முன்வந்திருந்தார் என்பது முதலாவது விடயமாகும்.

அவர் ஜே.வி.பியுடன் உடன்பாடுகாண, அவர்கள் வகுத்து முன்வைத்த பல நிபந்தனைகளுக்கு ஒப்புதல் அளித்தார் என்பதும் பகிரங்கமான விடயமே!

இந்த நிபந்தனைகளில் பல சமாதான நகர்வுகளை அடியோடு எதிர்ப்பதுடன், போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாட்டை மீளாய்வு செய்தல், சமாதான அனுசரணையாளர்களை மாற்றுதல், பொதுக் கட்டமைப்பை நிராகரித்தல், ஒற்றையாட்சி முறைமையை வலியுறுத்தல், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் தாயகக் கோட்பாட்டை நிராகரித்தல் போன்ற பல்வேறு இனவாத நோக்கிலான அம்சங்கள் அடங்கும்.

இதேபோன்று - ஜாதிக ஹெல உறுமயவுடன் அவர் 19நிபந் தனைகளுக்கு உடன்பாட்டை எட்டியிருந்தார். இந்த நிபந் தனைகள் அனைத்தும் இன்றைய சமாதான சூழலுக்கும், அதன் எதிர்கால முன்னெடுப்புகளுக்கும் அச்சுறுத்தலானவை என் பதை விளக்கவேண்டிய அவசியமே இல்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஒரே இலக்கு ஜனாதிபதிப் பதவி யைக் குறிவைத்தே இருந்ததால் அவர் நாட்டினதும், அவர் தனது அரசியல் செயற்பாட்டினதும் எதிர்கால சவால்களை தொலைநோக்குடன் சிந்திக்காது இந்தப் பேரினவாத சக்தி கள் அனைவரையும் திருப்திப்படுத்தி, அவர்கள் வசமிருந்த வாக்கு வங்கியை தன்வசம் ஈர்த்துக்கொள்ளும் வகையில் சாத்தியமற்றதும், ஆபத்தானதும் மட்டுமல்லாது முற்றுமுழுதாக இனவாத நோக்கிலானதுமான கொள்கைகளுக்கு தலைய சைக்க சம்மதித்தமையானது அவரின் பலவீனத்தையும், பதவியாசையையும் வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

-அவர் தனது தேர்தல் பிரசாரங்களில் கொடுத்த வாக்குறு திகளை நிறைவேற்ற முடியுமா என்று யோசித்து பேசியிருப்பாரா என்பது சந்தேகமே.

-ஆனாலும், அவரது வாக்குறுதிகளை, அரசியல் கொள் கைகளை, சமாதானம் குறித்த அவரது நிலைப்பாட்டை - தென்பகுதி பௌத்த சிங்கள மக்கள் நம்பியும் ஏற்றுக் கொண்டுமே அவருக்கு வாக்களித்துள்ளார்கள் என்றால், அவர் எவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புக்கும், அவரது தோழமைக் கட்சிகளின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டும் செயற்படப் போகிறார் என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

-அவர் தனக்கு வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாக செயற்படவேண்டும். தன்னை ஆதரித்த தோழமைக்கட்சகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் ஆட்சியை நடத்தவேண்டும், சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டும், இந்தியாவின் தலையீடுகளை சமாளிக்க வேண்டும், தேசம் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்கவேண்டும்.

-இவையனைத்தையும் எப்படி இவர் சந்திக்கப்போகிறார் என்பதற்கு இப்போது இவரிடம் விடையோ, வழியோ இருக்காது என்பதும் தெளிவு.

-இதற்கான விடையையோ, வழியையோ, சுயசிந்தனையின் அடிப்படையில் தேசிய நலன் சார்ந்த பார்வையில், தானே தேர்வு செய்ய, நடைமுறைப்படுத்த அவரது பின்னால் இப்போது அணிதிரண்டு நிற்போர் அனுமதிப்பார்களா என்பது சந்தேகமே ஆகும்.

-பௌத்த மத பீடங்களின் மகாநாயகர் கூறும் பௌத்த நாடு, சிங்களமொழி, ஒற்றையாட்சி என்ற அறிவுறுத்தல்களுக்கு தலைவணங்கவேண்டிய அவசியம் மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகளவில் இருக்கவே போகிறது.

-ஆகவே, இலங்கையின் அரசியல் யதார்த்தத்தை புரிநது கொண்டு அவர் தனது அரசியல் நகர்வுகளை, ஜனநாயகம், மனிதநேயம் என்ற பண்பாட்டியல் அடிப்படையில் தார்மீக சிந் தனையுடன் மேற்கொள்ளும் சுதந்திரம் ஏதுமற்ற பேரினவாதச் சூழலின் கைதியாகவே அவர் செயற்பட வேண்டிய அழுத்தம் இப்போது அவரை ஆக்கிரமித்துள்ளது...!

-எதுவானாலும் இந்த நாட்டின் பல தசாப்தகால இனப் பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில், அவர் களது அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் சர்வதேச அனுசரணையுடன் ஒரு நிரந்தரமான, நீதியான, விரைவான தீவை நோககிய தனது செயற்பாட்டை முன்னெடுக்காவிடில் மகிந்தவும் சந்தரிகா போன்றே சமாதானத்திற்கான போரை முன்னெடுத்து, அர்த்தமற்ற ஆட்சியை நடத்தி, தேசத்தை நிர்மூலமாக்கிவிட்டு தலைகுனிந்தபடி அவமானத்துடன் படியிறங்கும் ஒருவராகவே இருப்பார் என்பதில் ஐயமேயில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com





## மாவீரர் நாள் நவம்பர் - 27.2005

எமது வீரசுதந்திர வரலாறு - மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி'யார் பார்வையில்...**

# தென்னிலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தி எங்கே இருக்கிறது?

சோதிடம், சாஸ்திரம், ஹேஸ்யம், ஊகம் ஒன்று சொல்லப் படுகின்றதெல்லர் இந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்பார்த் ததற்கு முற்றிலும் மாறாகப் போய்விட்டது போலிருக்கிறதே! இவர்கள் இதற்கு ஏதாவது பதில் சொல்லுவார்கள் என்றே நினைக்கிறேன் என்று சொன்னபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

கிரகம் மாறிவிட்டது. ராசிப் பொருத்தமில்லாமல் போய் விட்டது என்று ஏதாவது சாட்டுச் சொல்லத்தான் வேண்டும். எந்தக் கிரகமும் ராசியும் வந்து என்ன செய்வது. தென்னிலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் சக்தி இப்போது எங்கே இருக்கிற தென்பதைப் புரிந்து கொண்டால் போதும் என்று நான் சொன் னேன்.

மஹிந்த வெற்றிபெற்றாலும்கூட அவரது வெற்றிக்குத் தனது சாதுரியமும் உழைப்பும்தான் காரணமென்று சொல் வதற்கு இடமில்லாமல் வெற்றி கிடைத்துவிட்டதென்பதால் சிலர் கவலைப்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் பேச்சு அடிபடு கிறதாம் என்று சொன்ன பரமசிவம், இனி இலங்கை அரசிய லில் என்ன நடக்கும்? என்று கேட்டார்.

எத்தனையோ வாக்குறுதிகள் அளித்திருக்கிறார். எதிர்க் கட்சிக் காரர்கள் இந்த வாக்குறுதிகள் பற்றிக் கேட்காமல் விட்டு விடுவார்களா? என்று நான் சொன்னேன்.

வாக்குறுதிகளும் அதைப் பற்றி எதிர்க்கட்சியினர் கேட்பது பற்றியெல்லாம் இருக்கட்டும். இனிப் புதிய அரசாங்கம் அமைக் கவேண்டும். மஹிந்த ஜனாதிபதி வேட்பாளராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் நியமிக்கப்பட்டபோது புதிய பிரதம மந்திரி வேட்பாளராக அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப் பட்டார். மஹிந்தவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு அநுரா கடுமையாக உழைக்கவில்லை. 1970ஆம் ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷவும், அநுரவும் இளம் பையன்களாக நாடாளு மன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுவந்தபோது நண்பர் களாக மகிழ்ச்சியுடன் நாடாளுமன்றத்துக்குள் உலாவந்த போது இந்தக் காட்சியை அநுரவின் தாயார் திருமதி சிறிமா பண்டார நாயக்க பார்த்து மகிழ்ந்ததுண்டு. பின்னர் சந்திரிகா அக்காவும்கூட மஹிந்த - அநுர உறவைப் பார்த்து மகிழ்ந்தார். சந்திரிகா அம்மையார் தமது பதவிக் காலம் இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டில்தான் நிறைவடையும் என்று திடமாகச் சொல்லிவந்தபோது புதிய ஜனாதிபதி பதவிக்குத் தாமே போட்டியிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று அநுரா எதிர்பார்த்திருந்தார். பண்டார நாயக்க பரம்பரையை ஆட் சியிலிருந்து நீக்கிவிடமுடியாது என்று அநுர பொது மேடை களிலும் பேசியிருக்கிறார். பண்டார நாயக்கவின் கடைசி வாரிசு தாமே என்றும் அவர் கூறி வந்திருக்கிறார். 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தேயாகவேண்டுமென்று ரணில் விக்கிரமசிங்க வற்புறுத்தி வந்ததுடன், புதிய ஜனாதி பதி பதவிக்குப் போட்டியிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை ஐக்கிய தேசியக் கட்சி நியமித்ததாலும், சுதந்திரக் கட்சிக்கும் நெருக்கடி ஏற்பட்டது. இதனால், மஹிந்த ராஜபக் ஷவை அவசர அவசரமாக சுதந்திரக் கட்சி நியமிக்க நேர்ந்தது. அநுரவை சாந்தப்படுத்துவதற்காக அநுரவின் பெயரை பிரதம மந்திரி பதவிக்கு பிரேரித்தார்கள்.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதற்கு ரணில் விக் கிரமசிங்க பிரசாரத்தைத் தொடங்கி நடத்திவந்தார். ஜனா திபதி பதவி 2005இல் முடிவடைகிறதென்றும், புதிய ஜனா திபதியைத் தெரிவு செய்யும் நாளும் அறிவிக்கப்பட்டது. ஒருவருடம் தாமதித்து ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்ற கனவு கலைந்தது. பண்டார நாயக்க வாரிசு ஜனாதிபதியாகும் கனவும் கலைந்தது. இப்பொழுது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு விட்ட தாகத் தேர்தல் முடிவுகள் தெரிவித்துவிட்டன என்று பரம சிவம் சொன்னார்.

வடக்கு கிழக்கில் தேர்தல் முறையாக நடைபெறாமல் தடுக்கப்பட்டுவிட்டதென்றும், மீண்டும் வடக்கு-கிழக்கில் வாக்கெடுப்பு நடைபெறவேண்டுமென்றும் ரணில் விக்கிர மசிங்க தேர்தல் ஆணையாளரைக் கேட்டிருப்பதாகவும், இது பற்றிப் பரிசீலனை செய்யப்படுவதாகவும் வதந்தி கிளம்பி யிருந்ததே என்று நான் கேட்டேன்.

நீரே சொல்லி விட்டீரே வதந்தி கிளம்பியதென்று. அது வதந்தி என்றுதான் நானும் நினைக்கிறேன். இப்போதுள்ள நிலைமையில் ரணில் விக்கிரமசிஙக அடுத்த ஜனாதிபதி பத விக்குத் தேர்தல் நடைபெறும் வரை காத்திருக்கவேண்டு மென்றுதான் தோன்றுகிறது. அடுத்த பிரச்சினை அநுர பண்டார நாயக்கவை பிரதம மந்திரியாக்குவதற்கு சிறிலங்கா ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானிக்குமா? அநுராவுக்குப் பதிலாக வேறு யாரையும் நியமிக்கும் யோசனை இருக்கிறதா? மங்கள சமரவீரவுக்கும் பிரதமர் பதவியில் ஒரு கண் இருப்ப தாகப் பேச்சடிப்பட்டது. ஜே.வி.பிக்காரருக்கும் பிரதமர் பதவி யில் விருப்பம் இருக்கிறதாம் என்று பரமசிவம் சொன்னார்.

இந்தத் தேர்தலில் ஒரு வேடிக்கைபார்த்தீரா? ஐக்கிய தேசியக் கட்சியின் நிறுவனத் தலைவரும் சுதந்திர இலங்கை யின் முதல் பிரதமருமான டி.எஸ்.சேனநாயக்கவின் தொகு தியாக விளங்கிய மீரிகம பகுதியிலும் அவரது மகனும், பின் னர் பிரதம மந்திரியாக இருந்தவருமான டட்லி சேனநாயக் கவின் டெடிகமத் தொகுதிப் பகுதியிலும் கூட ரணில் விக் கிரமசிங்கவுக்கு வெற்றியைத் தேடிக்கொடுப்பதற்கான வாக் குகள் கிடைக்கவில்லை. சேனநாயக்க குடும்ப பரம்பரையை ஒடுக்கப்போவதாகச் சொல்லிவந்த ஜே.ஆர். அதை ஓரங் கட்டிவிட்டதாகவே தோன்றுகிறது. இதேசமயம் பண்டார நாயக்க குடும்பத்தையும் ஓரங்கட்டும் நடவடிக்கை வெற்றி கரமாக நடந்துகொண்டிருப்பதாகவும் தோன்றுகிறது. இத னால்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை யாரும் அழிப்ப தற்கு விடமாட்டேன் என்று சந்திரிகா அம்மையார் சில தினங் களுக்கு முன் ஒரு வைபவத்தில் பேசியிருந்தது நினைவுக்கு வருகிறது என்று நான் சொன்னேன்.

யார், யாரை? எந்தப் பரம்பரையை ஒதுக்கவும், ஓரங்கட்டவும் முயற்சி செய்யலாம். அது ஆதிக்க சக்திகளுக்கிடையிலிருக் கும் போட்டியாகும். இப்பொழுது பல வாக்குறுதிகளைக் கொட்டி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வந்திருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சங்கடங்கள் தோன்றும்போது இதுவரை ஆட்சிக்கு வந்தவர்கள் செய்த அதே முறையைத்தான் கையாள் வாரா? அதாவது பிரச்சினைகள் நெருக்கும்போது தமிழ் மக் களின் உரிமைப் போராட்டத்தைச் சாட்டாக வைத்து புதிய பிரச்சினைகளைக் கிளப்பி திசைதிருப்பித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பாரா? என்று பரமசிவம் கேட்டார்.

இனி இந்தப் பாச்சா பலிக்காதென்பதை ரணில் இப்போது உணர்ந்திருப்பார். தெற்கு வாலை ஒழுங்காக வைத்திருக்கா விட்டால், தலை அதற்கேற்ப ஆடும் என்று நான் சொன்னேன். நிர் சொல்வது மெத்தச் சரி என்று நடந்தார் பரமசிவம்.

செய்திக் கட்டுரை...

**குடிசை வீடுகளிலும், தொண்டரமைப்புக்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புக்களிலும் வாழும் இந்த மக்கள் வீட்டின் கூரைகளினால் மழைநீர் ஒழுகுவதாகவும், நிலத்தில் ஈரம் ஊறுவதாகவும், பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், தொண்டரமைப்புக்கள் எவையும் தம்நிலை பற்றி உதவிபுரிய முன்வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.**

# தொடரும் மழையால் புனித நகர் மக்கள் பெரும் அவலம்

அண்மை நாட்களாகப் பெய்து வரும் மழை காரணமாக பருத்தித்துறை புனிதநகர் கிராமத்தில் குடிசைகளில் வாழும் மக்கள் குடியிருப்புகளுக்குள் மழை வெள்ளம் நுழைந்துவிடும் என்ற அபாயத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

புனித நகர்க் குடியிருப்புத் திட்டத்தில் கடந்த 24 வருடங்களாக 54 குடும்பங்களும், இராணுவ ஆக்கிரமிப்பின் போது நாகர் கோவிலிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 150 குடும்பங்கள் கடந்த 5 வருடங்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சொந்த நாட்டிலே அகதியாகி புனிதநகர் குடியிருப்புத் திட்டத்தில் குடிசை வீடுகளிலும், தொண்டர் அமைப்புகள் அமைத்துக் கொடுத்த தற்காலிகக் குடியிருப்புகளிலும் வாழ்ந்து வந்த இந்த மக்கள் கடந்த வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்திலும் சிக்குண்டு தலைநிமிரத் தொடங்கிய வேளை கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கன மழை காரணமாக வீடுகளுக்குள் மழை வெள்ளம் செல்லும் என்ற அபாயத்துடனும், வீடுகளையும், குடியிருப்புகளையும் சுற்றி மழை வெள்ளம் தேங்கிநிற்க நிம்மதியைத் தொலைத்து தூக்கமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்த சில நாட்களுக்கு மழை தொடருமானால் மழை நிச்சயம் இவர்களின் குடியிருப்புக்களுக்குள் வெள்ளம்செல்லும் என்ற அபாய நிலை! புனிதநகர் குடியிருப்பேணி வீதியிலிருந்து ஆனைவிழுந்தான் மயான வீதியால் ஏறத்தாழ ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கடற்கரையை அண்மித்ததாகக் காணப்படுகிறது.

இந்தப்பிரதேசமானது மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுவதுடன், எந்த அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலே இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களின் முக்கிய பிரச்சினையாக போக்கு வரத்துப் பாதை உள்ளது. ஆனை விழுந்தான் மயான வீதி ஏறத்தாழ ஒருகிலோ மீற்றர் நீளமுடையது. ஆனால், இதில் 150 மீற்றர் நீளமான வீதியே தாரினால் போடப்பட்டுள்ளது. எஞ்சிய வீதி கிரவல் மண் கொண்டே போடப்பட்டுள்ளது. கிரவல் மண்வீதி பெய்துவரும் மழையால் கரைந்து மக்களின் போக்குவரத்துக்கு பெருஞ் சிரமங்களை ஏற்படுத்துவதோடு, தாழ்வுப் பிரதேசமாகையால் வீதியின் பல இடங்களில் மழைநீர் சிறு குளங்கள் போலத் தேங்கி நிற்கிறது. மழை வெள்ளம் பாய்வதற்குரிய வடிகால் வசதிகளோ, மதகுகளோ இல்லாத நிலையே இங்கு உள்ளது.

அண்மையில் வீதியில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்திற்குள் சறுக்கி விழுந்த ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்ததாக நகரக்கழிவுகளைப் பொறுப்பற்ற விதத்தில் இந்த மக்களின் குடியிருப்புகளுக்கண்மையில் கொட்டுவதால், அவை மழை நீருடன் அள்ளுப்பட்டுச் சென்று இந்த மக்களின் குடியிருப்புக்குள் சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தி வருவதாக இந்த மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

குறிப்பாக பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை போன்றவற்றின் கழிவுகளும், தனிநபர்களால் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வரும் மிருகக்கழிவுகளும் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் இந்தக் குடியிருப்புக்களுக்கண்மையில் கொட்டப்பட்டுவதால் - துர்நாற்றம் வீசி வருவதோடு, நுளம்புப் பெருக்கம் அதிகரித்து தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் புனிதநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக் கூறி கடிதங்கள் அனுப்பியும் எவ்வித பயனும் இல்லையெனவும், தொடர்ந்தும் இங்கே கழிவுகளைக் கொட்டி வருவதாகவும் தெரிவிக் கின்றனர்.

நகரக்கழிவுகளை தமது வாழ்விடங்களில் கொட்டுவதால் தாம் பின் தங்கிய மக்களா? என விசனத்துடன் இந்தப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

குடிசை வீடுகளிலும், தொண்டரமைப்புக்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகளிலும் வாழும் இந்த மக்கள் வீட்டின் கூரைகளினால் மழை நீர் ஒழுகுவதாகவும், நிலத்தில் ஈரம் ஊறுவதாகவும், பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், தொண்டரமைப்புக்கள் எவையும் தம் நிலை பற்றி உதவிபுரிய முன்வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் எத்தேவையானாலும் குறிப்பாக கடைகள் எதுவுமே இங்கில்லை. பொருட்களுக்கும், வைத்தியத் தேவைகள் மற்றும் எல்லாவற்றுக்கும் மந்திகைக்கோ, பருத்தித் துறைக்கோ வரவேண்டியநிலை உள்ளது. ஆனால், வீதியின் மோசமான நிலையால் பெருஞ்சிரமங்களுக் குள்ளாகியுள்ளனர்.

குடிநீரைப் பொறுத்தவரை சுனாமியால் பாதிக்கப்பட்டபின் எல்லாக் கிணறுகளும் உவராகிய நிலையில் ஓரிரு கிணறுகளை நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது. அவையும் மழை நீரால் அசுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மலசல கூட வசதிகளும் இந்தப் பகுதியில் குறைவாகவே காணப்படுவதோடு இதனால் சுகாதார சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மின்சாரவசதி அற்ற நிலையில் இந்த மக்கள் அரிக்கன் லாம்பு, கைவிளக்கு போன்றவற்றின் மூலமே பிள்ளைகளின் கல்வியையும், அன்றாட அலுவல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறாக அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழந்து வரும் இந்த மக்கள், தற்போது பெய்து வரும் மழையால் மேலும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு இடம் பெயரவேண்டிய அவலநிலையும் ஏற்பட்டுள்ளது. இவர்களின் நிலை பற்றி அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்தில் கொள்ளுமா?

**தர்ஜனன்**

செய்திக் கட்டுரை...

# நெடுந்தீவு மக்களின் எரியும் பிரச்சினைகளில் ஒன்றான எரிபொருள் பிரச்சினை...

நெடுந்தீவு பிரதேசம் யாழ். பெருநிலப்பரப்பை விட்டு நீண்ட தூரம் கடல்தாண்டி பயணிக்க வேண்டியதென்பது அனைவரும் அறிந்த விடயம். அதனுள்ளே நீண்ட தூரம் தாண்டிச் சென்று தான் நிலையிலேதான், இங்குவாழும் ஒவ்வொரு மக்களும் தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியதாகவுள்ளது. இந்த வேலைகளை சேவைகளை தாண்டும் கட்டடத்தில் நெடுந்தீவுக்கான எரிபொருள் தேவையான எந்த அளவில் பூர்த்தியாக்கப்படுகின்றது. அதனை நிறைவேற்ற எத்தனை தூரம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்றது என்பது தொடர்பாகவும் அது விடயமாக மக்கள் மத்தியில் உள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் இந்தக் கட்டுரை மூலம் ஆய்வு செய்யவிரும்புகிறேன். இதன் மூலம் இதற்கான தீர்வு எட்டப்படுமானால் அதன் பயனை தீவக மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதல் எதுவித ஐயப்பாடும் இல்லை.



15 வருடங்களுக்கு முன்பு நெடுந்தீவுத்துறைமுகப் பகுதியில் இவ்வாறான அளவில் அமைக்கப்பட்டு தேவைகள் நிறைவேற்றப்பட்டது. இதனை தனியாரொருவரே இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபன உதவியுடன் மேற்கொண்டிருந்தார். நாட்டினது அசாதாரண சூழல் காரணமாகப் போதிய எரிபொருள் பெறமுடியாமலும், பாரியசேமிப்பு கலன்கள் சேதமடைந்தமையாலும் இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் உபகரணங்கள் சேதமான நிலையில் இன்று மூடப்பட்டுள்ளது.

தீவுக்கான எரிபொருள் யாழ்ப்பாணத்தில் இருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பவுசர் மூலம் குறிகாட்டுவானுக்கு எடுத்துவரப்பட்டு, 210 லீற்றர் கொண்ட பெரல்களில் நிரப்பி அதனை படகுமூலம் நெடுந்தீவுக்குக் கொண்டுவரும் வகையிலே தற்போது எரிபொருள் முகவர்களாக நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கமும், தனியார் ஒருவரும் விநியோகச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது பணி, சேவை சீராக இடம்பெறுகின்றது. ஆனால், தீவினது தேவைக்கேற்ப தட்டுப்பாடு இல்லாத முறையிலே இந்தச் சேவையினை ஆற்றுவதற்கு எமது போக்குவரத்துச் சாதனங்கள் இடம் கொடுப்பதாக இல்லை. இந்த வகையில் தான் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் படகு மூலம் ஒரு தடவை 210 லீற்றர் கொண்ட சுமார் 35 பரல்களையே தீவுக்கு கொண்டுவர முடியும். இதிலே பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பன உள்ளடங்கவேண்டும். அவ்வாறு இதிலே தடங்கல் ஏற்பட்டால், ஏதாவது ஒருவகை எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவும். இதன் காரணமாகப் பல செயற்பாடுகள் தாமதமடையும். இவ்வாறு இடம்பெறுவது வழமையானதாகிவிட்டது.

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள அரச அலுவலக, தனியார் வாகனங்கள், பொலிஸாரின் வாகனங்கள், வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்து, படகுச்சேவை சில சமயங்களில் குமுதினிப்படகு, மின்சாரசபை, மின்இயந்திரம் என டீசல் தேவை நீண்டு கொண்டு செல்லும்.



இந்த நிலையில் தான் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். அண்மைக் காலத்தில் மின்சாரசபை மின்இயந்திரத்துக்கான எரிபொருள் எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டதால், மின்விநியோக நேரம் மட்டுப்படுத்தப்பட்டது. இதன் பயனாக அலுவலகங்கள், பாடசாலைகள் பெரிதும் பாதிப் படைந்தன. இதன்போது இங்குள்ள முகவர்களிடம் இருந்த எரிபொருளை வைத்து அதற்கான செயற்பாட்டைச் சீராக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதேபோலவே தான் தற்போது கடல்தொழில், வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் பெருமளவு பயன்படுத்தப்படுவதனால், அதற்கான மண்ணெண்ணெய் தேவையானளவு எப்போதும் இருக்கவேண்டிய நிலைப்பாடுள்ளதுடன் அது அவர்களது வாழ்வாதாரத் தேவையாகவும் உள்ளது.

இதற்கான தட்டுப்பாடு நிலவினால் அல்லது இல்லாது போனால் மீன்பிடித்தலில் வருமானம் ஈட்டக்கூடிய தற்போதைய பருவ காலத்திலும், அவர்களது வருமானங்களைத் தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

இந்த வகையிலே இவ்வாறான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே எரிபொருளை தேக்கி வைக்கக்கூடிய வசதிகள் எதுவும் இங்கு இல்லை. சாதாரணமான எண்ணை பரல்களில் நீண்டகால தேவை நோக்கில் சேமித்து வைப்பதற்கு - கால நிலை, இடவசதி என்பன இடம் கொடுக்காது. இதன் காரணமாக நெடுந்தீவுப் பிரதேசத்துக்கென எரிபொருள்நிரப்புநிலையம் அமைக்கப்பட்டு, அதிலே பாரியசேமிப்பு கலன் களைப் பொருத்தி அதன் மூலம் தேவைகளை நிறைவேற்ற முடியும் என மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகின்றது.

15 வருடங்களுக்கு முன்பு நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியில் இவ்வாறான அளவில் அமைக்கப்பட்டு தேவைகள் நிறைவேற்றப்பட்டது. இதனை தனியாரொருவரே இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபன உதவியுடன் மேற்கொண்டிருந்தார். நாட்டினது அசாதாரண சூழல் காரணமாகப் போதிய எரிபொருள் பெற முடியாமலும், பாரியசேமிப்பு கலன்கள் சேதமடைந்தமையாலும் இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் உபகரணங்கள் சேதமான நிலையில் இன்று மூடப்பட்டுள்ளது.

இந்த வகையில் நெடுந்தீவில் உள்ள அதிகாரிகளும், பொது அமைப்புகளும், நிறுவனங்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு எமது தேவைகளை முன்வைத்து தொடர்ந்து அழுத்தத்தைக் கொடுத்து நெடுந்தீவில் தற்போது தனியார் மூலமோ அன்றி ப.நோ.கூ.சங்கம் ஊடாகவோ எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதனூடாக நெடுந்தீவு மக்கள் எரிபொருள் தொடர்பாக அனுபவிக்கும் சிரமங்களை இல்லா தொழிக்கலாம். இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து மின்சாரசபை மற்றும் குமுதினிப் படகு என்பவற்றுக்கு எடுத்துவரப்படும் எரிபொருள் சிரமத்தையும் நீக்கலாம்.

மாறிமாறி வரும் பருவக்காற்றால் கடல் பயணம் என்பது சிரமமானதொன்றாகவுள்ளது. சீரான பயண காலங்களில் பெருமளவில் எரிபொருளைக் கொண்டு வந்து இந்நிலையத்தில் சேமித்து வைத்து விநியோகம் செய்யலாம்.

எனவே, இந்தத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு சேவையாற்ற விரும்பும் நிறுவனங்கள், அமைப்புகள் தம்மாலான அழுத்தங்களைக் கொடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தினை அமைக்க ஆவன செய்யவேண்டும் என அனைவரும் எதிர்பார்த்து காத்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறுமா?

**கண்ணன்**

# க தொகுதி ரீதியான முடிவுகள்

ில் - 19288
ல்லுபடியானவை - 55354
ாத்த வாக்குகள் - 55769
வுசெய்யப்பட்டவை - 73005

**மாத்தறை**
றிந்த - 37829
ில் - 22941
ல்லுபடியானவை - 61322
ாத்த வாக்குகள் - 61805
வுசெய்யப்பட்டவை - 79784

**வெலிகம**
றிந்த - 40027
ில் - 24225
ல்லுபடியானவை - 65065
ாத்த வாக்குகள் - 65633
வுசெய்யப்பட்டவை - 84614

## அம்பாந்தோட்டை மாவட்டம்

**முல்கிரிகல**
றிந்த - 42897
ில் - 24784
ல்லுபடியானவை - 68789
ாத்த வாக்குகள் - 69434
வுசெய்யப்பட்டவை - 88528

**பெலியத்த**
றிந்த - 36615
ில் - 19290
ல்லுபடியானவை - 56713
ாத்த வாக்குகள் - 57075
வுசெய்யப்பட்டவை - 72862

**தங்காலை**
றிந்த - 53291
ில் - 25992
ல்லுபடியானவை - 80319
ாத்த வாக்குகள் - 81014
வுசெய்யப்பட்டவை - 102009

**திஸ்ஸமகராம**
றிந்த - 63197
ில் - 40006
ல்லுபடியானவை - 104513
ாத்த வாக்குகள் - 105525
வுசெய்யப்பட்டவை - 133196

## யாழ்ப்பாணம் மாவட்டம்

**ஊர்காவற்துறை**
றிந்த - 139
ில் - 98
ல்லுபடியானவை - 263
ாத்த வாக்குகள் - 276
வுசெய்யப்பட்டவை - 52986

**வட்டுக்கோட்டை**
றிந்த - 53
ில் - 191
ல்லுபடியானவை - 263
ாத்த வாக்குகள் - 278
வுசெய்யப்பட்டவை - 62781

**காங்கேசன்துறை**
றிந்த - 97
ில் - 148
ல்லுபடியானவை - 260
ாத்த வாக்குகள் - 267
வுசெய்யப்பட்டவை - 67133

**மானிப்பாய்**
றிந்த - 64
ில் - 256
ல்லுபடியானவை - 340
ாத்த வாக்குகள் - 357
வுசெய்யப்பட்டவை - 68787

**கோப்பாய்**
றிந்த - 54
ில் - 267
ல்லுபடியானவை - 362
ாத்த வாக்குகள் - 388
வுசெய்யப்பட்டவை - 63752

**உடுப்பிட்டி**
றிந்த - 11
ில் - 52
ல்லுபடியானவை - 64
ாத்த வாக்குகள் - 65
வுசெய்யப்பட்டவை - 55499

**பருத்தித்துறை**
றிந்த - 09
ில் - 25
ல்லுபடியானவை - 35
ாத்த வாக்குகள் - 39
வுசெய்யப்பட்டவை - 47188

**சாவகச்சேரி**
றிந்த - 10
ரணில் - 33
செல்லுபடியானவை - 50
மொத்த வாக்குகள் - 53
பதிவுசெய்யப்பட்டவை - 62022

**நல்லூர்**
மஹிந்த - 100
ரணில் - 128
செல்லுபடியானவை - 308
மொத்த வாக்குகள் - 313
பதிவுசெய்யப்பட்டவை - 70251

**யாழ்ப்பாணம்**
மஹிந்த - 124
ரணில் - 301
செல்லுபடியானவை - 438
மொத்த வாக்குகள் - 455
பதிவுசெய்யப்பட்டவை - 62089

**கிளிநொச்சி**
மஹிந்த - 00
ரணில் - 01
செல்லுபடியானவை - 01
மொத்த வாக்குகள் - 01
பதிவுசெய்யப்பட்டவை - 89454

## வன்னி மாவட்டம்

**மன்னார்**
மஹிந்த - 2183
ரணில் - 20463
செல்லுபடியானவை - 23063
மொத்த வாக்குகள் - 23424
பதிவுசெய்யப்பட்டவை - 78906

**வவுனியா**
மஹிந்த - 7936
ரணில் - 33553
செல்லுபடியானவை - 42262
மொத்த வாக்குகள் - 43028
பதிவுசெய்யப்பட்டவை - 104884

**முல்லைத்தீவு**
மஹிந்த - 510
ரணில் - 372
செல்லுபடியானவை - 891
மொத்த வாக்குகள் - 902
பதிவுசெய்யப்பட்டவை - 66596

## திருகோணமலை மாவட்டம்

**சேருவில**
மஹிந்த - 21353
ரணில் - 17835
செல்லுபடியானவை - 39759
மொத்த வாக்குகள் - 40165
பதிவுசெய்யப்பட்டவை - 66166

**திருகோணமலை**
மஹிந்த - 10878
ரணில் - 41369
செல்லுபடியானவை - 53106
மொத்த வாக்குகள் - 54062
பதிவுசெய்யப்பட்டவை - 91095

**மூதூர்**
மஹிந்த - 18817
ரணில் - 21061
செல்லுபடியானவை - 48808
மொத்த வாக்குகள் - 49350
பதிவுசெய்யப்பட்டவை - 81534

## மட்டக்களப்பு மாவட்டம்

**கல்குடா**
மஹிந்த - 11105
ரணில் - 28482
செல்லுபடியானவை - 40369
மொத்த வாக்குகள் - 40872
பதிவுசெய்யப்பட்டவை - 91410

**மட்டக்களப்பு**
மஹிந்த - 15798
ரணில் - 65401
செல்லுபடியானவை - 82428
மொத்த வாக்குகள் - 85398
பதிவுசெய்யப்பட்டவை - 147979

**பட்டிருப்பு**
மஹிந்த - 905
ரணில் - 24142
செல்லுபடியானவை - 25489
மொத்த வாக்குகள் - 25736
பதிவுசெய்யப்பட்டவை - 79339

## திகாமடுல்ல மாவட்டம்

**அம்பாறை**
மஹிந்த - 57624
ரணில் - 44218
செல்லுபடியானவை - 103179
மொத்த வாக்குகள் - 104128
பதிவுசெய்யப்பட்டவை - 136738

**சம்மாந்துறை**
மஹிந்த - 21029
ரணில் - 24969
செல்லுபடியானவை - 46641
மொத்த வாக்குகள் - 47158
பதிவுசெய்யப்பட்டவை - 66666

**கல்முனை**
மஹிந்த - 8951
ரணில் - 29316
செல்லுபடியானவை - 38779
மொத்த வாக்குகள் - 39235
பதிவுசெய்யப்பட்டவை - 63251

**பொத்துவில்**
மஹிந்த - 27707
ரணில் - 55467
செல்லுபடியானவை - 84359
மொத்த வாக்குகள் - 85222
பதிவுசெய்யப்பட்டவை - 129798

## புத்தளம் மாவட்டம்

**புத்தளம்**
மஹிந்த - 19939
ரணில் - 40060
செல்லுபடியானவை - 60891
மொத்த வாக்குகள் - 61919
பதிவுசெய்யப்பட்டவை - 95350

**நாத்தாண்டியா**
மஹிந்த - 29227
ரணில் - 26367
செல்லுபடியானவை - 56150
மொத்த வாக்குகள் - 56595
பதிவுசெய்யப்பட்டவை - 79631

**வென்னப்புவ**
மஹிந்த - 33040
ரணில் - 32191
செல்லுபடியானவை - 65966
மொத்த வாக்குகள் - 66543
பதிவுசெய்யப்பட்டவை - 95892

**ஆனமடுவ**
மஹிந்த - 38002
ரணில் - 30358
செல்லுபடியானவை - 69139
மொத்த வாக்குகள் - 69771
பதிவுசெய்யப்பட்டவை - 96746

**சிலாபம்**
மஹிந்த - 36115
ரணில் - 37372
செல்லுபடியானவை - 74378
மொத்த வாக்குகள் - 75063
பதிவுசெய்யப்பட்டவை - 102987

## குருநாகல் மாவட்டம்

**கல்கமுவ**
மஹிந்த - 37876
ரணில் - 30720
செல்லுபடியானவை - 69375
மொத்த வாக்குகள் - 69945
பதிவுசெய்யப்பட்டவை - 91698

**ஹிரியால**
மஹிந்த - 30785
ரணில் - 31412
செல்லுபடியானவை - 62900
மொத்த வாக்குகள் - 63693
பதிவுசெய்யப்பட்டவை - 86112

**பிங்கிரிய**
மஹிந்த - 30624
ரணில் - 29941
செல்லுபடியானவை - 61195
மொத்த வாக்குகள் - 61589
பதிவுசெய்யப்பட்டவை - 78140

**தம்பதெனிய**
மஹிந்த - 37231
ரணில் - 29818
செல்லுபடியானவை - 67741
மொத்த வாக்குகள் - 68340
பதிவுசெய்யப்பட்டவை - 85455

**பொல்காவெல**
மஹிந்த - 27851
ரணில் - 25317
செல்லுபடியானவை - 53467
மொத்த வாக்குகள் - 54036
பதிவுசெய்யப்பட்டவை - 69821

**குருநாகல்**
மஹிந்த - 28791
ரணில் - 29564
செல்லுபடியானவை - 58896
மொத்த வாக்குகள் - 59521
பதிவுசெய்யப்பட்டவை - 77003

**நிக்கவரட்டிய**
மஹிந்த - 32978
ரணில் - 29692
செல்லுபடியானவை - 63332
மொத்த வாக்குகள் - 63864
பதிவுசெய்யப்பட்டவை - 83696

**யாப்பகுவ**
மஹிந்த - 40136
ரணில் - 34469
செல்லுபடியானவை - 75322
மொத்த வாக்குகள் - 76050
பதிவுசெய்யப்பட்டவை - 100497

**வாரியப்பொல**
மஹிந்த - 29155
ரணில் - 22919
செல்லுபடியானவை - 52618
மொத்த வாக்குகள் - 53158
பதிவுசெய்யப்பட்டவை - 68194

**பண்டுவஸ்நுவர**
மஹிந்த - 26365
ரணில் - 25456
செல்லுபடியானவை - 52350
மொத்த வாக்குகள் - 52742
பதிவுசெய்யப்பட்டவை - 67023

**கட்டுகம்பொல**
மஹிந்த - 35311
ரணில் - 31580
செல்லுபடியானவை - 67582
மொத்த வாக்குகள் - 68104
பதிவுசெய்யப்பட்டவை - 85753

**குளியாப்பிட்டிய**
மஹிந்த - 34357
ரணில் - 33874
செல்லுபடியானவை - 68892
மொத்த வாக்குகள் - 69550
பதிவுசெய்யப்பட்டவை - 89722

**மாவத்தகம**
மஹிந்த - 29513
ரணில் - 28658
செல்லுபடியானவை - 58867
மொத்த வாக்குகள் - 59474
பதிவுசெய்யப்பட்டவை - 77819

**தொடங்கஸ்லந்த**
மஹிந்த - 24658
ரணில் - 21100
செல்லுபடியானவை - 46391
மொத்த வாக்குகள் - 469988
பதிவுசெய்யப்பட்டவை - 63148

## அநுராதபுர மாவட்டம்

**மதவாச்சி**
மஹிந்த - 29071
ரணில் - 21647
செல்லுபடியானவை - 51427
மொத்த வாக்குகள் - 51873
பதிவுசெய்யப்பட்டவை - 71396

**ஹொரவப்பொத்தான**
மஹிந்த - 26330
ரணில் - 22027
செல்லுபடியானவை - 49021
மொத்த வாக்குகள் - 49492
பதிவுசெய்யப்பட்டவை - 68066

**அநுராதபுரம் கிழக்கு**
மஹிந்த - 33726
ரணில் - 25382
செல்லுபடியானவை - 59764
மொத்த வாக்குகள் - 60327
பதிவுசெய்யப்பட்டவை - 80971

**அநுராதபுரம் மேற்கு**
மஹிந்த - 31575
ரணில் - 29829
செல்லுபடியானவை - 62384
மொத்த வாக்குகள் - 63055
பதிவுசெய்யப்பட்டவை - 86433

**கலாவெவ**
மஹிந்த - 46073
ரணில் - 33758
செல்லுபடியானவை - 80879
மொத்த வாக்குகள் - 81715
பதிவுசெய்யப்பட்டவை - 106717

**மிஹிந்தல**
மஹிந்த - 22454
ரணில் - 16891
செல்லுபடியானவை - 39925
மொத்த வாக்குகள் - 40354
பதிவுசெய்யப்பட்டவை - 54554

**கெக்கிராவ**
மஹிந்த - 26220
ரணில் - 24314
செல்லுபடியானவை - 51224
மொத்த வாக்குகள் - 51730
பதிவுசெய்யப்பட்டவை - 68671

## பொலநறுவ மாவட்டம்

**மின்னேரியா**
மஹிந்த - 31081
ரணில் - 23819
செல்லுபடியானவை - 55587
மொத்த வாக்குகள் - 56323
பதிவுசெய்யப்பட்டவை - 72430

**மெதிரி கிரிய**
மஹிந்த - 27230
ரணில் - 25533
செல்லுபடியானவை - 53388
மொத்த வாக்குகள் - 53790
பதிவுசெய்யப்பட்டவை - 69230

**பொலநறுவ**
மஹிந்த - 47188
ரணில் - 44951
செல்லுபடியானவை - 93183
மொத்த வாக்குகள் - 94119
பதிவுசெய்யப்பட்டவை - 121941

## பதுளை மாவட்டம்

**மஹியங்கன**
மஹிந்த - 26877
ரணில் - 32592
செல்லுபடியானவை - 60523
மொத்த வாக்குகள் - 61470
பதிவுசெய்யப்பட்டவை - 78986

**வியலுவ**
மஹிந்த - 16803
ரணில் - 16423
செல்லுபடியானவை - 34094
மொத்த வாக்குகள் - 34705
பதிவுசெய்யப்பட்டவை - 45049

**பசற**
மஹிந்த - 15717
ரணில் - 25176
செல்லுபடியானவை - 41491
மொத்த வாக்குகள் - 42365
பதிவுசெய்யப்பட்டவை - 54910

**பதுளை**
மஹிந்த - 17494
ரணில் - 18624
செல்லுபடியானவை - 36623
மொத்த வாக்குகள் - 37135
பதிவுசெய்யப்பட்டவை - 48670

**ஹாலி - எல**
மஹிந்த - 19946
ரணில் - 23638
செல்லுபடியானவை - 44511
மொத்த வாக்குகள் - 45296
பதிவுசெய்யப்பட்டவை - 57900

**ஊவா - பரணகம**
மஹிந்த - 21387
ரணில் - 22127
செல்லுபடியானவை - 44218
மொத்த வாக்குகள் - 44806
பதிவுசெய்யப்பட்டவை - 55655

**வெலிமட**
மஹிந்த - 23736
ரணில் - 26108
செல்லுபடியானவை - 50645
மொத்த வாக்குகள் - 51285
பதிவுசெய்யப்பட்டவை - 64481

**பண்டாரவெல**
மஹிந்த - 24294
ரணில் - 29137
செல்லுபடியானவை - 54393
மொத்த வாக்குகள் - 55291
பதிவுசெய்யப்பட்டவை - 71292

**கப்புதல**
மஹிந்த - 15856
ரணில் - 25935
செல்லுபடியானவை - 42582
மொத்த வாக்குகள் - 43318
பதிவுசெய்யப்பட்டவை - 56220

## மொனறாகலை மாவட்டம்

**பிபிலை**
மஹிந்த - 28663
ரணில் - 22103
செல்லுபடியானவை - 51612
மொத்த வாக்குகள் - 52179
பதிவுசெய்யப்பட்டவை - 58660

**மொனராகல**
மஹிந்த - 37575
ரணில் - 27754
செல்லுபடியானவை - 66318
மொத்த வாக்குகள் - 67215
பதிவுசெய்யப்பட்டவை - 87943

**வெள்ளவாய**
மஹிந்த - 54066
ரணில் - 39117
செல்லுபடியானவை - 94419
மொத்த வாக்குகள் - 95474
பதிவுசெய்யப்பட்டவை - 119506

## கேகாலை மாவட்டம்

**டெடிகம**
மஹிந்த - 32231
ரணில் - 30391
செல்லுபடியானவை - 63283
மொத்த வாக்குகள் - 63896
பதிவுசெய்யப்பட்டவை - 80201

**ரம்புக்கன**
மஹிந்த - 24559
ரணில் - 20078
செல்லுபடியானவை - 45178
மொத்த வாக்குகள் - 45674
பதிவுசெய்யப்பட்டவை - 59711

**மாவனல்ல**
மஹிந்த - 25701
ரணில் - 32203
செல்லுபடியானவை - 58709
மொத்த வாக்குகள் - 59311
பதிவுசெய்யப்பட்டவை - 78208

**தெரணியகல**
மஹிந்த - 22653
ரணில் - 22087
செல்லுபடியானவை - 45573
மொத்த வாக்குகள் - 46099
பதிவுசெய்யப்பட்டவை - 58163

**கலிகமுவ**
மஹிந்த - 25086
ரணில் - 21875
செல்லுபடியானவை - 47616
மொத்த வாக்குகள் - 48059
பதிவுசெய்யப்பட்டவை - 61932

**கேகாலை**
மஹிந்த - 27444
ரணில் - 20451
செல்லுபடியானவை - 48438
மொத்த வாக்குகள் - 48859
பதிவுசெய்யப்பட்டவை - 63755

**அரனாயக்க**
மஹிந்த - 18391
ரணில் - 18906
செல்லுபடியானவை - 37846
மொத்த வாக்குகள் - 38280
பதிவுசெய்யப்பட்டவை - 49586

**யட்டியாந்தோட்ட**
மஹிந்த - 25080
ரணில் - 26056
செல்லுபடியானவை - 51074
மொத்த வாக்குகள் - 51610
பதிவுசெய்யப்பட்டவை - 65737

**ருவான்வெல**
மஹிந்த - 26522
ரணில் - 24684
செல்லுபடியானவை - 51909
மொத்த வாக்குகள் - 52390
பதிவுசெய்யப்பட்டவை - 65989

## இரத்தினபுரி மாவட்டம்

**ஹெகலிய கொட**
மஹிந்த - 37243
ரணில் - 29255
செல்லுபடியானவை - 67302
மொத்த வாக்குகள் - 67804
பதிவுசெய்யப்பட்டவை - 83705

**இரத்தினபுரி**
மஹிந்த - 43251
ரணில் - 37253
செல்லுபடியானவை - 81572
மொத்த வாக்குகள் - 82292
பதிவுசெய்யப்பட்டவை - 100230

**பெல்மடுல்ல**
மஹிந்த - 26511
ரணில் - 27178
செல்லுபடியானவை - 54537
மொத்த வாக்குகள் - 55107
பதிவுசெய்யப்பட்டவை - 65445

**பலாங்கொட**
மஹிந்த - 35410
ரணில் - 34049
செல்லுபடியானவை - 70587
மொத்த வாக்குகள் - 71423
பதிவுசெய்யப்பட்டவை - 77938

**ரக்குவான**
மஹிந்த - 33169
ரணில் - 34413
செல்லுபடியானவை - 68605
மொத்த வாக்குகள் - 69410
பதிவுசெய்யப்பட்டவை - 84595

**நிவிட்டிகல**
மஹிந்த - 34569
ரணில் - 29987
செல்லுபடியானவை - 65582
மொத்த வாக்குகள் - 66142
பதிவுசெய்யப்பட்டவை - 78157

**கலவான**
மஹிந்த - 24463
ரணில் - 18740
செல்லுபடியானவை - 43860
மொத்த வாக்குகள் - 44274
பதிவுசெய்யப்பட்டவை - 52156

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் தேர்தல் நடத்தக் கோருகிறது ஐ.தே.கட்சி!

கொழும்பு—

வடக்கு - கிழக்கு தமிழ் பகுதிகளில் மீளவும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படியும் - தேர்தல் ஆணையாளர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இதற்கு உத்தரவிட வேண்டுமென்றும் ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூர்ய, பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் இது குறித்து மேலும் கூறியதாவது-

வடக்கு - கிழக்கில் மறு தேர்தல் நடத்தவேண்டுமென்று கட்சியின் சட்ட ஆலோசகர் கே.என்.சொக்சி மற்றும் கட்சியின் செயலாளர் வீரகொட ஆகியோர் தேர்தல் ஆணையாளரிடம் மனு ஒன்றை அளித்தனர்.

அந்த மனுவில் வடக்கு - கிழக்கில் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறவில்லை. ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் தங்களது வாக்குகளைச் செலுத்தவிடாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த பகுதிகளிலும் பதிவு செய்த வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படாததால், அவர்களது அடிப் படை உரிமையான வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்துக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி வடக்கு - கிழக்கில் மறு தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று அவர்கள் கூறினர்.

# தலா 11 மாவட்டங்களில் ரணில் - மகிந்த வெற்றி!

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் தலா 11 மாவட்டங்களில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

இதன்படி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருனாகல, அனுராதபுரம், பொலநறுவ மொனராகல, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு, கண்டி, மாத்தளை, நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி மட்டக்களப்பு திகாமடுல்ல திருகோணமலை புத்தளம் மற்றும் பதுளை மாவட்டங்களிலும் வெற்றி பெற்றனர்.

# தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது கிரனேட் வீச்சு!

## 4 பேர் பலி - 20பேர் காயம்

அம்பாறை—

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் பெரிய ஜும்மா பள்ளி வாசலில் நேற்று அதிகாலை தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 4 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன், 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் இப்ராகிம் (ஆசிரியர்), முகமது அபூபக்கர், எம்.ஐ.எம்.முஸ்தபா, எம்.ஏ.நூர்தீன் ஆகிய நால்வருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவத்தின்போது பள்ளி வாசலில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்ததாகவும், அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் கைக்குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து அந்தப் பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக மேலதிக பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில் நடைபெற்ற இந்தச் சம்பவமானது அரசியல் பின்னணியா அல்லது வேறு காரணமா? என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக எல்லைப் பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்கள் அச்சம் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி அக்கரைப்பற்று இராமகிருஸ்ணன் பாடசாலையில் தங்கியுள்ளனர். (07)

## இரு போராளிகள் வீரச்சாவு

அம்பாறை—

கடந்த 14 ஆம் திகதி அம்பாறை மாவடத்தில் தேசவிரோதக் குழுவினரின் தாக்குதலின்போது இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்.கேணல் முகிலன் அல்லது சுரேஸ் (பழனிவேல் ஜெயக்குமார்- விநாயகபுரம், திருக்கோயில், அம்பாறை).

கப்டன் புன்னகையன் அல்லது வெள்ளை (யோகநாதன் ஜெனார்த்தனன் - மைலங்கரைச்சை, வாழைச்சேனை, மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

# தமிழ்மக்கள் வாக்களிக்காதது ஐ.தே.க வுக்கு ஏமாற்றமே!

## பிரதிச் செயலர் கூறுகிறார்

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக்காதது தங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.க.வின் பிரதி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாக கூறியதாவது -

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்கின்றோம். புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.

நாம் தேர்தல் முடிவுகளை ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால், வடக்குப் பிரதேசத்தில் பாரிய அளவில் வாக்குப் பதிவு குறைந்திருப்பது எம்மை ஏமாற்றமடையச் செய்துவிட்டது.

தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்தது அடிப்படை உரிமை மீறலாகும். எமது தேர்தல் செயற்பாடுகளில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

# சமாதான முயற்சிகள் தொடர நோர்வே விருப்பம் தெரிவிப்பு!

## மகிந்தவுக்கு வாழ்த்து அனுப்பிவைப்பு

ஒஸ்லோ—

இலங்கையில் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள நோர்வே அரசாங்கம் - இலங்கை சமாதான முயற்சியில் தொடர்ந்தும் தாம் ஈடுபட விரும்புவதாக தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியை நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது-

இலங்கை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளுக்காக முன்னெடுப்புக்கள் உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட நோர்வே விரும்புகிறது என்று தனது செய்தியில் எரிக்சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மஹிந்தவுக்கு மக்கள் வாக்களித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள எரிக்சொல்ஹெய்ம் - யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை காப்பாற்றவும், விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் உறுதியான ஒத்துழைப்புவழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இரு தரப்பினரும் கேட்டுக்கொண்ட தற்கிணங்க அனுசரணையாளர் பணியை மேற்கொண்டுவரும் நோர்வே தொடர்ந்து இனப்பிரச்சினையில் குறிப்பிட்ட வகையில் செயற்பட உறுதியளிப்பதாகவும் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

### அன்று...

அதாவது பிரபாகரன் உருவாவதற்கு பண்டாரநாயக்க காரணமாக இருந்தது உண்மை.

அதுபோலவே மகிந்தவின் வெற்றியானது பிரபாகரனின் வெற்றிக்கான வாய்ப்பாக அமையப்போகிறது. அன்று பண்டாவால் தொடங்கப்பட்டது இன்று மகிந்தவால் முடிக்கப்படவுள்ளது.

ஆகவே பண்டா சகாப்தம் என்று மகிந்தவும் பொருத்தமாகக் கூறியிருக்கிறார். சிங்கள மக்களுக்கு இவர் என்ன செய்யப்போகிறார் என்பதை எதிர்காலம் கூறப்போகிறது.

பலர் கூறுவதைப்போல [illegible] ஆட்சியாளர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடு மிகக் கூர்மையாக முற்றி, இன்னொரு கிளர்ச்சி அல்லது கலகம் அல்லது ஊழி விபத்தாக மாறப்போகின்ற ஆபத்தை நோக்கி சிங்களம் செல்கிறது என்பதில் எங்களுக்கு எவ்வித சந்தேகம் இல்லை.

அந்தவகையில் தமிழ்மக்கள் தங்களுடைய பாதுகாப்பை எந்த வகையில் உருவாக்கிக்கொள்ள வேண்டும். தமிழ்மக்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதெல்லாம் மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் சிந்திக்கவேண்டிய கட்டத்தில் எங்கள் மக்கள் வாழ்கிறார்கள்.

எனவே, இந்த அரசியலை கூர்மையாகப் பார்க்கவேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என க.வே.பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

### மகிந்த...

ஊடகவியலாளர்களிடம் பேசிய வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே பகிரங்கமீாக தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு பாடுபடவோ அல்லது ஆதரவாக செயற்படாத அவரை எப்படி பிரதமராக்க முடியும். எனினும் பிரதமர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்க ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மறுத்துவிட்டார்.

இருப்பினும் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்பு நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறினார்.

### முஸ்லிம்கள்...

திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது.

இப்படியான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள்மூலம் சமாதான நிலைமையை மேலும் குந்தகப்படுத்துவதற்காகவும், தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் பிரிவினையை உருவாக்குவதற்காகவும் மறைமுகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த தீய சக்திகளை நாம் இனங் கண்டுள்ளோம். உண்மைகள் விரைவில் வெளிவரும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகிந்த வெற்றி...

அபாயம் உள்ளது. முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்காக விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன்.

இலங்கையில் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்திருப்பதன்மூலம் நிலைமை மிகமிக மோசமடைந்திருக்கிறது என்றும் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இதேவேளை, உள்நாட்டு யுத்தம் மீண்டும் வெடிக்கும் அபாயம் இருப்பதாக அரசியல் நோக்கர் ஒருவர் கருத்துத் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# வாழைச்சேனையில் மீட்கப்பட்டது முஸ்லிம்களின் சடலங்கள்!

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்தில் நேற்று அதிகாலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்ட இரண்டு சடலங்களும் ஏறாவூர் பிரதேச முஸ்லிம்களுடையது என்று - பதில் நீதிபதி வினோபா இந்திரன் முன்னிலையில் அடையாளம் காணப்பட்டது.

சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் சின்ன லெப்பை கபீப் மொகம்மது (வயது 34) மீரா சாகிபு காலித் (வயது 32) ஆகியோர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஊர்காவல் படை வீரரான சின்ன லெப்பை கபீப் மொகமட் கடந்த ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஏறாவூர் ஆற்றங்கரைக்கு மீன் வாங்கச் சென்றபோது இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டவர் என்றும் -


மத்திய கிழக்குக்கு ஆட்களை அனுப்பும் மீரா சாகிபு காலித் கடந்த மாதம் 23 ஆம் திகதி வீட்டுக்கு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயம் தொடர்பாக கொம்மாந்துறைக்குச் சென்றபோது காணாமற்போயிருந்தவர் என்றும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் சார்ஜன்ட் காயம்!

வடமராட்சி—

மந்திகை சிலையடிப் பகுதியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தின் முன்பாக காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது நேற்றுக்காலை நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 10.35 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சார்ஜன்ட் விக்கிரமசிங்க என்ற பொலிஸ்காரரே படுகாயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



சிங்கக் கொடியுடன் மகிந்தவின் வெற்றியைக் கொண்டாடும் அவரது ஆதரவாளர்கள்.

### இன்று..

50 வீதத்துக்கும் மேலதிகமான வாக்கு களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளார். செல்லுபடியான வாக்குகளில் 50 வீத்தைவிட 28 ஆயிரத்து 632 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளார்.

இதன்படி - அவர் பெற்றுள்ள செல்லுபடியான வாக்குகள் 50.29 வீதமாகும். இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் பெறப்பட்ட வாக்குகளின் படி இரண்டாவது வேட்பாளரைவிட ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 786 வாக்குகளைப் பெற்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 56 ஆவது பிரிவின்படி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

## கொழும்பு பங்குச் சந்தை நேற்று திடீர் வீழ்ச்சி!

கொழும்பு—

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குச்சுட்டெண்களும் நேற்று திடீரென சரிவைச் சந்தித்தன.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி - ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்து, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதாலேயே இந்தச் சரிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதில்லை என்றும் - தேர்தலிலிருந்து ஒதுங்கியிருக்கப் போவதாகவும் விடுதலைப் புலிகளும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தெரிவித்ததாலேயே நேற்று கொழும்புப் பங்குச்சந்தை விலைச்சரிவைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

### மகிந்த ராஜபக்ஷவின்...

இலட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் முழு இலங்கையிலும் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தமுறை ஜனாதிபதித் தேர்தல் முறையாக நடத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

சில இடங்கில் வாக்காளர்களை ஏற்றிச்செல்வதற்கு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டபோதிலும் அவை திருப்பி அனுப்பப்பட்டன.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையில் முறிவடையும் நிலையிலுள்ள அமைதி முயற்சிகளுக்கு கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யபபட்ட மகிந்த ராஜபக்ஷ எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக் கொண்டு அழைப்புவிடுத்தால் சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தயாராக தான் இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

### போர் நிறுத்தத்தை...

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மேற்படி உண்மையான நிலைப்பாட்டை அவர்கள் புரிந்துகொள்வார்களென நாம் நம்புகிறோம். விடுதலைப் புலிகள் தொடர்பாக ராஜபக்ஷ கொண்டுள்ள கடுமையான நிலைப்பாடு, அவரது தவறான மூலோபாயமாகும்.

சிங்களத் தலைமைகள் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் புரிந்துகொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் வழங்கும் வாக்குறுதிகளை எங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால், அவர்கள் தற்போதைய களநிலைமையைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும்.

யார் பதவிக்கு வந்தாலும் அவர்கள் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவ செயலமர்வு

சுதுமலை

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ செயலமர்வு எதிர்வரும் டிசம்பர் 10 திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்தாக கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்தார்.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தாம் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களைப் பாடசாலை அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளதுடன், இதில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இங்கு வகுப்பறை முகாமைத்துவம், பாடத்திட்டம் வகுத்தல், பாடக்குறிப்பு எழுதுதல், ஆசிரிய விழுமியங்கள், உளவியல், பிரயோகக் கல்வி, கல்விச் சமூகவியல், புதிய கல்விச் செயல் நெறிகள், கல்வித் தத்துவார்த்த வரலாற்றியல், மாணவர் தனியாள் வேறுபாடு எனப் பல்வேறு தலைப்புகளில் வாண்மை விருத்திச் செயலமர்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

# சுகாதார சீர்கேடான உணவு விற்றவரிடம் நீதிமன்றம் தண்டப்பணம் அறவிட்டது!

பண்டத்தரிப்பு

உணவகம் ஒன்றில் சுகாதார பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக தயாரிக்கப்பட்ட உணவை விற்பனைக்காக வைத்திருந்த நபர் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றில் ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் பண்டத்தரிப்பு உணவகமொன்றில் சுகாதார சீர்கேடு ஏற்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்ட உணவை பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் சோதனையில் கண்டுபிடித்து மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த வேளையே இந்தத் தண்டப் பணத்தைச் செலுத்துமாறு மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் உத்தரவு பிறப்பித்தார்.

# செயற்திட்ட கருத்தமர்வு

சுதுமலை

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் கிராம செயற்திட்டக் கருத்தமர்வு நாளை காலை 9.30 மணிக்கு மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கிராமத்தின் தேவைகள் கிராமத்தவர்களால் இனம் காணப்பட்டு, அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பான தொடர் செயற்திட்டக் கருத்தாய்வில் வரணி, நாவற்குழி, கைதடி, மட்டுவில் கிராம மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். செயற்திட்டக் கருத்தாய்வு நிகழ்வுகள் அல்வைப்பிட்டி, அரியாலை போன்ற இடங்களில் இடம் பெற்றுள்ளதாகவும் ஊக்குவிப்பாளர் ஞா.கருணாகரன் தெரிவித்தார். (91)

# சமூக பகுப்பாய்வு செயலமர்வுக் கூட்டம்

சுதுமலை

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூகப் பகுப்பாய்வுத் திட்ட மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு இளவாலை புனித யூதாததேயு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூகப் பகுப்பாய்வுக் குழுத் தலைவர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வு கடந்த வாரம் யாழ். வை.எம்.சி.ஏ.யில் நடைபெற்றதாகவும், இந்தக் குழுத் தலைவர்களுக்கான மீளாய்வுக் கூட்டமே எதிர்வரும் 22 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாகவும் நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ். சோதம்பாவா தெரிவித்தர். (91)

# நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 126 ஆவது குரு பூசை தினத்தின் சார்பாக நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்த முடிவுகள் விபரம் வருமாறு-

**மேற்பிரிவு** - முதலாம் இடம் - தாரணி செல்வராசா (இராமநாதபுரம் மகாவித்தியாலம்), இரண்டாம் இடம் - சற்குணராசா நிகேஸ் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்- லாவண்யா இரத்தினசிங்கம் (அளவெட்டி அருணோதயா இந்துக் கல்லூரி), கலையரசி கணபதிப்பிள்ளை (யாழ்.புனித திரேசா மகளிர் கல்லூரி),

**மத்திய பிரிவு** -முதலாம் இடம் - சின்னத்துரை சோபிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - கிருஸ்ணா கந்தசுவாமி (யாழ். மகாஜனாக் கல்லூரி), மூன்றாம் இடம் - சி.அகிலா (யாழ். சோமாஸ்கந்தா கல்லூரி).

**கீழ்பிரிவு** - முதலாம் இடம் - கோபிகா சேனாதிராயா (யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), இரண்டாம் இடம் -தர்சினி சச்சிதானந்தம் (கிளி. இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம் - குலநீஸ்வரன் சுஜீவன் (யாழ். கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்), சச்சிதானந்த சிவம் வேனிலன் (கிளி. கிளிநொச்சி இந்துக் கல்லூரி) ஆகியோரே இந்தப் போட்டியில் வெற்றியீட்டியவர்களாவர்.

# கூழாவடி வீதியோர ஆலமரத்தால் மக்கள் போக்குவரத்துக்கு சிரமம்

கூழாவடி

ஆனைக்கோட்டை கூழாவடி சிறுவர் பூங்காவுக்கு முன்னால் வீதி ஓரத்தில் வளர்ந்திருக்கும் பாரிய ஆலமரத்தால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் பலரும் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் அடர்ந்து வளர்ந்துள்ள இந்தப் பாரிய ஆலமரத்தால் யாழ் -மானிப்பாய் வீதியில் செல்லும் கனரக வாகனங்கள் உட்பட பல வாகனங்களும் போக்குவரத்தில் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவித்ததுடன், இந்த மரம் வீதியை நோக்கி சரிந்துள்ளதால் வீதி விபத்துக்கள் இடம்பெற ஏதுவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த மரம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (44)

# விநாயகர் விரத பூஜை ஆரம்பம்

கொக்குவில்

யாழ்.வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் கடந்த புதன்கிழமை விநாயகர் விரத பூஜை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தினமும் காலை 7 மணி தொடக்கம் மாலை 5.45 மணி வரை விநாயகப் பெருமானுக்கு விரத பூஜைகளும், விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றுவருகின்றன. (206)

# பயிற்சிநெறி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்

இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி பிற்போடப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் நடைபெறவிருந்த இன்ரறக்ட் கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என நல்லூர் றோட்றிக் கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

# சண்டிலிப்பாயில் திருட்டுக்கள் அதிகரிப்பு

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் திருடர்கள் தொடர்ந்து தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

கடந்த வாரம் மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பொருத்தப்பட்ட மின் மோட்டார் -இரவு வேளை பாடசாலைக்குள் புகுந்த திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பாக இளவாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த வாரம் இந்தப் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் விஷமிகள் பெறுமதியான இரு இரும்புத் தூண் பைப்புகளை எடுப்பதற்காக காடாப்புலம் கிராமிய வைத்தியசாலை அமைந்துள்ள இடத்தைக் குறிக்கின்ற பெயர்ப் பலகையை உடைத்தெறிந்துவிட்டு இரண்டு இரும்புத் தூண்பைப்புகளை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.சுகாதார, பொது சுகாதார பரிசோதகர் - பொறுப்பதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை சுகாதர வைத்தியர் தெரிவித்துள்ளார்.

# குருநகரில் வீட்டின் மீது டைனமைற் தாக்குதல்

கொக்குவில்

கடந்த புதன்கிழமை இரவு இனம் தெரியாதவர்களால் குருநகர் அடம்பன் வீதியில் அமைந்துள்ள வீடொன்று டைனமைற் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்தவர்கள் மயிரிழையில் தப்பித்துக் கொண்டதாகவும் தெரிய வருகிறது. (206)

# கழிவு நீர்த் தேக்கத்தால் தொற்று நோய் அபாயம்

யாழ்ப்பாணம்

யாழ்.நகர பிரதான வீதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் தேங்குகின்ற கழிவு நீரினால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடுநுளம்பு தொல்லை அதிகரித்து வருகிறது.

வைத்தியசாலை அமைந்துள்ள சுற்றாடல் பகுதி மற்றும் சிவன் கோவிலடி சுற்றுப் பகுதி வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதோடு தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.


கழிவு வாய்க்கால்கள் ஒழுங்கான முறையில் சுத்தப்படுத்தாமையால் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது. இது தொடர்பாக மாநகரசபை சுகாதாரப் பகுதியினருக்கு அறிவித்தும் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

# துயிலுமில்லத்தில் சிரமதானம்

நவிண்டில்

மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் கடந்த திங்கட்கிழமை உடுப்பிட்டி பீகோன் தனியார் கல்வி நிறுவன மாணவர்களால் துயிலுமில்ல உள்வளாகத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (116)





பருத்தித்துறை சிவன் சைவநூல் வெளியீட்டில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.சே.ஏகாம்பரநாதனின் கேதார கெளரி விரத நூல் உரை வெளியீட்டு விழாவில் -சங்கீத பூஷணம் திருமதி எஸ்.கோபாலசாமி இறைகீதம் இசைப்பதையும், யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறைப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸிடமிருந்து இலங்கை வங்கி பிராந்தியப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொள்வதையும், நிலையச் செயலாளரான நூலகர் எஸ்.திருச்செல்வம், விழாத்தலைவர் சைவப்புலவர் எஸ்.வேதாரணியக் குருக்கள், நூலாசிரியர் கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ், யாழ்பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் என். ஞானகுமாரன், சிவஸ்ரீ கே.சிவநேசக்குருக்கள் ஆகியோர் நிகழ்வில் பங்குகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (12)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ந.கோபிஷா
முகவரி : கட்டப்பிராய்.

அகவை ஒன்று



பெயர் : க.சுதர்மன்
முகவரி : தாவடி.

அகவை ஒன்று



பெயர் : ஜெ.பிரியன்
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கடப்பன்தவர் படமும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# கிளிநொச்சி பிரதேச மக்களால் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச ரீதியாக மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், விசேட கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளன.

மாவீரர் பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு - எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம், 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு பூநகரிப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - பூநகரி மகா வித்தியாலயத்திலும், பரந்தன் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும், அக்கராயன், கோணாவில் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 .மணிக்கு விசுவமடு பிரதேச மாவீரர் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - விசுவமடு மகாவித்தியாலயத்திலும், உருத்திரபுரம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - பாரதிபுரம் மகாவித்தியாலயத்திலும், முழங்காவில் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - முழங்காவில் வித்தியாலயத்திலும், அக்கராயன் வன்னேரிக்குளம், ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்திலும் - எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு வட்டக்கச்சி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலும், விசுவமடுப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - தருமபுரம் மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி நகர மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு- கிளிநொச்சி மத்தியகல்லூரியிலும், அக்கிராயன் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு - அக்கராயன் மகா வித்தியாலயத்திலும், பளைபிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு- பளை மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு- உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் வைத்து கௌரவிக்கப்படவுள்ளர்.

## கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரிப்பு

பூநகரி

பூநகரி - நாச்சிக்குடா கிராமத்தில் - கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருகிறது.

இந்தக் கிராமத்திலுள்ள பொதுச் சந்தை மற்றும் பொதுக் கட்டடங்கள் போன்றவற்றில் இரவு நேரங்களில் கால்நடைகள் தங்கி, இடங்களை அசுத்தப்படுத்தி வருவதால், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்கள் எவரும் கவனம் எடுக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மாவீரர் தினத்தை முன்னிட்டு சிரமதானம்

வவுனியா

மாவீரர் தினத்தை முன்னிட்டு அரசியற்துறையின் ஏற்பாட்டில் தாண்டியடி மாவீரர் துயிலுமில்லவளாகம் -சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிரமதானம் - மகிழடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா, அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, கடுக்காமுனை ஆகிய பற்றோ நிறுவன உறுப்பினர்கள் 200 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை - மாவீரர் நாளை முன்னிட்டு வெல்லாவெளிக்கோட்ட மகளிர் அரசியற்துறை ஒழுங்குபடுத்துதலில் பழுகாமம் மருத்துவமனை அந்தப் பிரதேச மக்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதில் 200 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பன்ன வேலைப் போட்டியும், கண்காட்சியும்

வட்டக்கச்சி

பன்னவேலையில் ஈடுபாடுடைய அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு- கண்காட்சியும், உற்பத்திப் பொருட்களுக்கான போட்டியும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது.

வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்படும் நைலோன், பிளாஸ்ரிக் பொலித்தீன் வகைப் பொருட்களால் எமது மண்ணும், எமது தாயக தேசமும் சூழல் மாசடையும் ஓர் அபாயகரமான சூழ்நிலைக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் இதற்கு மாற்றீடாகப் பாவிக்கக்கூடிய எமது தேசிய வளமான பனை வளத்தினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருட்களே உகந்ததாகும்.

இந்த வகையில் பன்ன வேலையில் ஈடுபாடுடைய அனைவரையும், ஊக்குவிக்கும் வகையில் பன்னவேலைப் பொருட்களுக்கான போட்டியும் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய தமிழீழத் தேசத்திலுள்ள அனைத்துப் பன்ன வேலையில் ஈடுபடும் உற்பத்தியாளரும், அனைத்துப் பன்ன வேலைப் பயிற்சியாளர்களும் தமது உற்பத்திப் பொருட்களைப் போட்டி நிலைக்குத் தகுந்தாற்போல், உற்பத்தி செய்து வட்டக்கச்சி ஒருங்கிணைந்த தமிழீழ மாதிரிப் பண்ணை அமைந்துள்ள பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்தில் அடுத்த மாதம் 21 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருட்களை ஒப்படைப்பதற்கான போக்குவரத்துச் செலவுகளைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமே பொறுப்பேற்று வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் - 19

1493: கொலம்பஸ் தனது இரண்டாவது பயணத்தின் போது ப்யூர்ட்டோ ரிகோவைக் கண்டுபிடித்தார்.

1669: முதன் முதலாக லண்டனில் நியூகார்ன் எக்ஸ் சேஸ்ச் டாவர்ன் என்னுமிடத்தில் வர்த்தகர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1799: பிரான்சில் ஆட்சிப் பொறுப்பை நடாத்தி வந்த டைரக்ரரி என்னும் நிர்வாகக் குழு பதவியில் இருந்து விரட்டப்பட்டு, மூவர்குழு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

1822: சிலியில் வால்பரைஸோ என்ற இடத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

1850: பிலடெல்பியாவைச் சேர்ந்த பிரடெரிக் லாங்கென்ஹயிம் என்பவர் ஒளிப்படத் தகடுகள் (Slides) செய்வதற்கான காப்புரிமம் பெற்றார்.

1887: நியூயோர்க் நகரில் சுதந்திரதேவி சிலையின் பீடத்தில் பொறிக்கப்பட்ட பாடலை எழுதிய புகழ்பெற்ற அமெரிக்கப் பெண் கவிஞர் எம்மா லாசரஸ் காலமானார்.

1893: நியூயோர்க் வேர்ய்ட் என்னும் செய்தித்தாள் முதன் முதலாக வர்ணப்படங்களுடன் நான்கு பக்கங்களைக் கொண்ட இணைப்பை வெளியிட்டது.

1919: பிரிட்டன் எகிப்திற்குப் புதிய அரசியல் சட்டத்தை வரைந்தளித்தது.

1941: வர்த்தகக் கப்பல் கொடியுடன் வந்த ஜேர்மனியப் போர்க்கப்பலான கோர்ரான் அவுஸ்ரேலிய ரோந்துக் கப்பலான சிட்னியை மூழ்கடித்தது. அக்கப்பலில் இருந்த 645 படையினர் இறந்து போயினர்.

1966: இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து ஜோர்தான் தனது இராணுவத்திற்கு ஆள்திரட்ட ஆரம்பித்தது.

1969: இம்மாதம் 14ஆம் திகதி ஏவப்பட்ட அப்பல்லோ - 12 என்ற விண்ணூர்தியில் சென்ற சார்ல்ஸ் கான்ராட் மற்றும் ஆலன்பீன் ஆகியோர் நிலாவில் இறங்கினர். இவர்கள் நிலவின் பரப்பில் 8 மணி நேரம் தங்கியிருந்தனர். பூமிக்கு திரும்பிவரும் போது 22 கிலோ எடையுள்ள நிலாப் பாறைகளைக் கொண்டு வந்தனர்.

1977: இந்தியாவின் ஆந்திராவில் குண்டூர் பகுதியில் மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் கடும் சூறாவளி வீசியது. இதில் ஏறக்குறைய 570,000 கால்நடைகள் அழிந்துபோயின. இலட்சக்கணக்கான வீடுகள் சிதைந்தன. பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்து போயினர்.

☛ எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இஸ்ரேல் பாராளுமன்றமான நெல்ஹெட்டில் உரை நிகழ்த்தினர்.

1982: ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவின் டில்லியில் ஆரம்பமாகின. டிசம்பர் 4ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் முப்பது நாடுகளைச் சேர்ந்த 3411 வீரர்கள் கலந்து கொண்டனர்.

☛ உலகின் முதல் சூரிய சக்தி - டீசல் மின்நிலையம் மேற்கு அவுஸ்ரேலியாவில் அமைக்கப்பட்டுள்ளது. இது தனது உற்பத்தியை ஆரம்பித்தது. இந்த நிலையம் வருடம் ஒன்றிற்கு 150 ஆயிரம் லீற்றர் எண்ணெய்யை சேமிக்கும் என கூறப்படுகிறது.

1984: மெக்ஸிக்கோ நகரின் புறநகர்ப் பகுதியில் வால்லி பான்ட்லா என்ற இடத்தில் திரவ வளியம் வெடித்ததனால் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில்; 350 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டி ஏற்பட்டது.

1993: ஐக்கிய நாடுகள் சபை ஈராக் மீதான பொருளாதாரத் தடையை மேலும் நீடித்தது.

1994: உக்ரேனிய நாடாளுமன்றம் தமது நாடு அணு ஆயுதமற்ற நாடாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை பேராதரவுடன் எடுத்தது.

1995: ஆப்கானிஸ்தானைக் கைப்பற்ற தலிபான் தீவிரவாதிகள் அரச படைகளுடன் கடும் போரை ஆரம்பித்தனர்.

தொகுப்பு :- சந்துரு

# மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு

சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த 33 வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு 13 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை - ஜப்பானிய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

நோய்களைக் கண்டறியும் உபகரணம், சத்திரசிகிச்சை உபகரணங்கள், பற்சிகிச்சை உபகரணங்கள், பிரசவ சிகிச்சை உபகரணங்கள் உட்பட வெளிநோயாளர் பிரிவுக்கான உபகரணங்களும் வழங்கியுள்ளதாகச் சுகாதார அமைச்சின உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.



மாவீரர் நாளை முன்னிட்டு முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் - பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர்கள் சிரமதானப் பணி செய்வதைப் படத்தில் காணலாம்.

- முழங்காவில் செய்தியாளர்.

# காரைதீவுக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பேன்

## கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

காரைதீவுக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளேன் எனக் காரைதீவுக் கோட்டத்திற்கான புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

காரைதீவு இ.கி.மிசன் ஆண்கள் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 12 பேருக்கான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் கடமையேற்று ஒரு வார காலமாகிறது. இரு பாடசாலைக்கு விஜயம் செய்துள்ளேன். எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஒரு புதிய உத்வேகத்துடன் இயங்கத் திட்டமிட்டுள்ளேன்.

காரைதீவுக்கு நான் அன்னியமானவனல்ல. காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் அதிபராக இருந்திருக்கிறேன். கல்வியில் பிரகாசிக்கும் இந்த மண் புனிதமானது.

வரலாற்றில் இந்தப் பாடசாலையில் ஒரு தடவையில் 12 மாணவர்கள் சித்தியடைந்திருப்பது இதுவே முதற்தடவையென்றபோது இந்தவிழாவில் நானும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக உழைத்த அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர் அனைவரையும் பாராட்டுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



முழங்காவில் பிரதேசத்தில் மக்கள் கட்டுமானப் பயிற்சியின் இரண்டாம் கட்ட அணி - நாவரசன் பயிற்சிப் பாசறையில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறுவதைப் படத்தில் காணலாம்.